# தமிழர் தகவல்

# Tamils' Information

ஒக்டோபர் 2004
இலண்டன்




வெள்ளை இருட்டை
விரட்டத் துடித்த
கறுப்பு வெளிச்சமே
காந்தியடிகள் !

மாத சோதிடம்
உள்ளே !

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


வர்ணஜாலம் எங்கே!
நடுப்பக்கம் பார்க்கவும்

# தமிழர் தகவல் Tamils' Information

ஒக்டோபர் 2004 | மலர் : 02 | இதழ் : 16


'' பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.'' – குறள்

## அவர் அவர் வாழ்க்கையில் ஆயிரம் அர்த்தங்கள்

பலமுறை ஒத்துழைத்தாயிற்று. பல முறை வெளியேறியும் வந்தாயிற்று. வந்ததன்பின் முன்பு இருந்த இடத்தைக் குறை சொல்வது. தன் பிரிவுக்கும் வரவுக்கும் சமாதானம் கூறுவது வழக்கமான அரசியல்வாதிகளின் அங்காடித்தனம். இதில் ஆறுமுகம் தொண்டைமான் அனுபவம் அற்றவரல்ல. ஆனால் அரசுக்குத்தரும் ஆதரவுக்குச் சொல்லும் காரணம் ஒரு புதிரான அணுகுமுறை போல் தெரிகிறது. சமாதானம் நிலைக்கவும், அதற்கான பேச்சுவார்த்தையை உருவாக்கவும், இடைக்கால நிர்வாக சபைக்கான தீர்வை நிலைப்படுத்தவுமே, ஒடிக் கொண்டிருந்த அரசுக்கு அரவணைப்புக் கொடுத்ததாக ஒரு '' கொயபல்ஸ் '' குதிராட்டமொன்றை வெளிப்படுத்தியிருக்கிறார். தன் புகைப்படம் பத்திரிகையில் முதல்பக்கத்தில் வரவேண்டுமென்ற ஆசைக்காக ஒருவன் மற்றவர்களால் செய்யமுடியாத ஒன்றை செய்ய விரும்பினான். அவன் செய்தது; புனித ஜெருசலேமைக் கொளுத்தியதுதான். இப்படிப் பழைய கதையொன்றுண்டு. ஆறுமுகன் அப்படிப்பட்டவரென்று நாம் இதுவரை எண்ணவில்லை.

அண்மையில் இலங்கையில் தனியார் ஒளிபரப்பு ஒன்றில் ஒரு கலந்துரையாடலைப் பார்க்க நேர்ந்தது. அதிலே ஆறுமுகனின் சார்பாகக் கலந்து கொண்ட இருவரும் பல விஷமத்தனமான விளக்கங்களைக் கொடுத்தனர். ஈழத்தமிழர்கள் வேறு தாங்கள் வேறு என்று வாதிட்டார்கள். அதில் கலந்து கொண்ட திரு. ஈழவேந்தன் மீதும் அவரது நியமன உறுப்பினர் பதவி மீதும் சேற்றை வாரி இறைத்தார்கள். உள்வீட்டுச் சண்டைகளை உருவாக்கித் தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைக்க ஆண்டாண்டாகச் செயற்பட்டு வரும் பெரும்பான்மை சமூகம் இதைப் பார்த்துப் பெருமைப்பட்டிருக்கும். குறிப்பிட்ட ஒளிபரப்பு நிலையம் ஒரு பெரும்பான்மை இனத்தின் நிறுவனமே. இந்நிகழ்வு 1947 ஐயும் அன்று நடந்த தமிழினப்பிரிவையும் ஞாபகப்படுத்துகிறது. அன்று தமிழினங்கள் செய்த தவறுகளை, மீண்டும் இன்று திரு. ஈழவேந்தன் செய்யலாமா ? அந்தக் கலந்துரையாடலுக்கு கூட்டமைப்பு எப்படி ஒப்புக் கொண்டது ? இன்னும் சரியான விடை கிடைக்கவில்லை.

இதே பந்தியில் ஏற்கனவே மலையகத்துத் தலைமை எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கிறது என்று எழுதியிருந்தோம். கருணா – அதாவுல்லா மூலம் கொடுக்க முடியாமற்போனதை இப்போது ஆறுமுகனை வைத்துச் செயற்படுத்த முனையும் சிங்களப் பேரினவாதத்தின் செயற்பாட்டை ஏன் நம்மால் உணரமுடியவில்லை. இது காலங்காலமாய் நடப்பதுதானே. வடக்கு – கிழக்கு – மலைநாடு என்ற மாறுபாடு ஒழிந்து வந்த நிலையில் இப்படி ஒரு நிகழ்வு தொடர நாம் அனுமதிக்கக்கூடாது. முஸ்லிம் அரசியல் கட்சிகளைப் போன்று இவர்களும் வேறாகி நின்று; தங்கள் இளைஞர்களை அரசுப் படைகளில் சேர்த்துக் கொள்ளுமாறு ஆட்சித் தலைவரைக் கேட்டிருக்கிறார்கள். அவரும் அதற்கு அனுதாபத்துடன் இணக்கியிருப்பதாகப் பத்திரிகை செய்திகள் கூறுகின்றன. இவை எங்குபோய் முடியும் ?

'' போராடப் புறப்பட்டதால்தான் வடக்கு – கிழக்குத் தமிழர் இன்று நாடு நாடாக அகதிகளாக அலைகின்றனர். நாங்கள் புத்திசாலித்தனமாக நடந்ததால்தான் மலையகத் தமிழருக்கு இந்நிலை இல்லை. இருந்த இடத்தில் மீண்டும் குடிவர அனுமதிக் கேட்டுத்தான் பேசி வருகிறீர்கள். நாங்கள் எங்கள் மக்களை இப்படிக் கஷ்டப்படுத்தினோமா '' இப்படி ஈழவேந்தன் கேட்டிருந்தார். ஒரு இ.தொ.கா நாடாளுமன்ற உறுப்பினர் '' மலையக மக்களின் வாழ்வு பெரும்பான்மை மக்களுடன் இரண்டறக் கலந்தது. அதுவே எங்கள் ஐயா காட்டிய வழியாகும், வடக்கு – கிழக்கு ஒரு தனிப்பகுதி. அவர்களோடு இணைவதை எங்கள் தலைவர் விரும்பவில்லை. அவ்வாறு விரும்பியிருந்தால் இன்றைக்கு மலையகம் அழிந்திருக்கும் '' என்றார் மற்றைய இ.தொ.கா நாடாளுமன்ற உறுப்பினர் இந்த ' அறிவு ' வளர இவர்களுக்கு இவ்வளவு காலம் தேவைப்பட்டிருக்கிறதே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

ஆறுமுகன் அரசுக்குத் தரும் ஆதரவு ஏன் என்பதைப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதிவருகின்றன. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில், ஆறுமுகனின் அமைச்சுக்காலத்தில் நடந்த ஒரு மில்லியன் டொலர் கணிணி மயத்திட்டம், தற்போதைய நகர அபிவிருத்திப் பொதுவசதிகள் அமைச்சரின் பிடிவாதமான விசாரணைகள், 3000 இளைஞர்களுக்கு வேலை தரப்படும் என்ற உறுதிமொழி இப்படிப் பல பிரச்சனைகள் ஆறுமுகனுக்கு உள்ளதாக அரசியல் விமர்சகர்கள் சொல்லுகிறார்கள். அதற்காகவே இந்த நிபந்தனையற்ற ஆட்சிப் பங்கும் ஆதரவும் என்று அறியமுடிகின்றது. அவரது வாழ்க்கையில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. அதுபற்றி நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஆயினும் அவர் ' இடைக்கால நிர்வாக சபைத் திட்டத்தை ஏற்படுத்தத்தான் ஒத்துழைத்தேன் ' என்று சொல்வதை ஏற்றுக் கொண்டு பாராட்ட முடியவில்லை.

எனினும் ஒரு மறுக்க முடியாத உண்மையை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தமிழர் கூட்டமைப்பின் அணுகுமுறை ஆறுமுகன் விடயத்தில் சரியாக இல்லை. ஒரு ஆயுதம் ஏந்திய போராளியாக இருந்து அரசியல் பேசும் சுப. தமிழ்ச்செல்வன் அளவுக்குப் பொறுப்பான – பொறுமையான விளக்கத்தினை இவர்களால் சொல்லமுடியாமற் போனது தமிழினத்தின் தவறான அரசியலாகின்றது. எப்படிப்பார்த்தாலும் ஆறுமுகனை நாம் வெட்டிப் பேச முடியாது; ஏனெனில் நாம் மலையகச் சகோதரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் அவர். பிரித்துப் பேசியதை அவர் விரும்பியிருக்கவில்லை என்பதை அவர் பிற்பாடு தனது கட்சிக்காரர்களுக்கு விதித்திருக்கும் கடுமையான கட்டுப்பாட்டிலிருந்து தெரிகிறது. இனிமேல் தமிழர் கூட்டமைப்புக்கு கிளிநொச்சியில் அரசியல் சொல்லித்தரப்பட வேண்டும். அதுதான் எதிர்காலத்தின் இடர்ப்பாட்டினையும் பிரிவுணர்வுகளையும் தடுக்கும். அன்றேல் அந்த வல்லாதிக்கம் நம்மைச் சிதற வைத்துவிடும்.

– ஆசிரியர்

**தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்**


முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :

020 8480 3320



வெளியீடு :

திருமுருகன் அறிவகம்
இலண்டன்

Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்

Editor :
Aravindan

வங்கி :

H.S.B.C
A/C Name :
TAMILS' INFORMATION
SORT CODE : 40-35-30
A/C No.: 81437100

கணணி, அச்சுப்பதிப்பு :
தமிழர் தகவல்

Computering & Printing :
Thamizhar Thagaval


£ 6.00 தபாற் செலவை
மேற்படி வங்கியில்
செலுத்தின்
வருடம் முழுவதும்
'' **தமிழர் தகவல்** ''
உங்கள்
இல்லம்தேடி வரும்

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே


வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !

## தரங்கெட்ட தமிழ் சினிமா உலகம்

"தாயை மறந்தவன், தாய் மொழியை மறந்தவன்", முக விலாசம் தொலைத்தவன் போலத் தமிழகம், அடையாளம் இல்லாமல் போய் விடுமோ என்ற பயம்தான், டாக்டர் ராமதாஸ், திருமாவளவன் போன்றோர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்படி இருப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆச்சரியமும் இல்லை. இந்தக் காரணங்களுக்காக அவர்கள் தமிழ் சினிமாவைத் தாக்குவது சரிதான். ஆங்கிலேயனுக்கு இருக்கிற மொழிப் பற்றுக் கூடத் தமிழனுக்கு இல்லை. கேரளாவில் தயாரிக்கப்படும் மலையாளப்படத்திற்கு இங்கு வைப்பது போல் ஆங்கிலத்தின் பெயர் வைக்க முடியுமா ?

ஆங்கிலப் பெயர் மாத்திரமல்ல, அடாவடித்தனமாக தலைப்பும் வைக்கிறார்கள். சாதாரண தலைப்பாக இருந்தாலும் நல்ல தமிழ்த் தலைப்பு வைக்கலாம். அடாவடித்தனமாக, அடி, வெட்டு, குத்து, கொல்லு என்று பெயர் வைத்து இதுதான் வீரச்செயல் போல ஒரு கதாநாயகனைச் சித்திரித்துக் காட்டும்போது – இதையே உதாரணமாக வைத்துச் சராசரி ரசிகன் எடுத்துக் கொள்ளமாட்டானா ? சினிமாவில் அரசியல்வாதிகளைக் காட்டும்போது மிகக் கேவலமாகச் சித்தரித்துக் காட்டுகிறார்கள். எம்.எல்.ஏ, எம். பிக்கள், மந்திரிகளை கேவலமாகச் சினிமாவில் காட்டும்போது அரசியல்வாதிகள் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் சினிமாவில் உள்ள தவறை அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டினால் மட்டும் கோபப்பட்டால் என்ன நியாயம் ? சுட்டிக்காட்ட அவர்களுக்கு உரிமை இல்லையா ?

( குமுதம் : பாரதிராஜா பேட்டி )

## சமயமும், சாம்பலும்

"... சுமார் எட்டாயிரம் உயிர்கள் வரை சமயத்தின் பெயரால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு மரணத்தை அரவணைத்த அந்தப் புழுதிச் சாம்பல் படர்ந்த பூமியைப் பார்த்த போது ... ?"

சாமநத்தம் – சாம்பல் நத்தம் என்பதுதான் அந்த ரத்தச் சாம்பல் படிந்த இடத்தின் உண்மையான பெயர். காலப் போக்கில் சுருங்கி இன்று 'சாமநத்தம்' ஆகிவிட்டது. இவ்வூர் மதுரையில் இருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. இப்போதும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் ஆறாம் நாள் சித்திரைத் திருவிழாவாக நடக்கும் 'கழுவேற்றம்' இந்தக் கிராமத்தில் என்றோ நடந்த சமய எல்லை மீறல்களுக்கு ஒரு ரத்த சாட்சி. ஆயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன்பு பாண்டிய நாட்டில் திருஞான சம்பந்தரால் தோற்கடிக்கப்பட்ட சமண மதத்தவர்கள் 8000 பேர் துடிக்கத் துடிக்கக் கழுவேற்றப்பட்டது இங்குதான். அதை நிறைவேற்றிய மன்னன் கூன் பாண்டியன். சாமநத்தம் கிராமத்தில், அந்த பாழடைந்த ( பொட்டல்) பூமி, செம்மண் நிலமாக மாறிக் கிடக்கிறது. பார்க்கிற இடமெல்லாம் உடைந்த மண்டை ஓடுகள், கைகள், எலும்புகள், ஒரு கிராமத்தையே அழித்ததுபோல் அங்கு ஒரு சமூகம் அகற்றப்பட்டிருப்பது வேதனைக்குரியதே.

( வீரசேகரி – வல்லவ செல்வன் )

## ஒரு வரலாற்றுத் துரோகம்

"இரண்டாவது உலக யுத்த முடிவுக்கு முன்னதாகக் கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களைக் கொண்டதாகவே இருந்தது. அம்மாகாணச் சனத் தொகையில் 8% சிங்களவராக இருந்தனர். முதலாவது உலக யுத்தத்துக்கு முன்னர் அம்பா கோட்டையில் உதவி அரசாங்க அதிபராக இருந்த பிரிட்டன் சிவில் சேவையாளர் வெனாட் ஆல்ஃவ் இந்தக் காலத்தில் பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் 'கிழக்கு மாகாணத்தை கிழக்குத் தமிழ் மாகாணம்' என்றுதான் குறிப்பிட்டிருந்தார். டீ.எஸ். சேன நாயக்கா பிரதமர் ஆனபின் ஏற்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்களின் பின்தான் சிங்களர் 30 வீதமாகிவிட்டனர். இது ஆதாரமான சரித்திர உண்மை"

( தினக்குரல் – 05.09.2004 )

## தாகம் வருமா

புலம் பெயர்ந்த தலைமுறையினரின் போராட்ட உணர்வுகளையும், அடையாளங்களுக்கான தவிப்பையும், பிறந்த மண்ணின் ஈர்ப்பையும் பகிர்ந்து கொள்ளாத இவை பற்றிய ஆழ்ந்த பிரக்ஞை இல்லாத – புலம் பெயர்ந்த மண்ணில் பிறந்துள்ள புதிய தலைமுறையினரிடம் என்ன எதிர்பார்க்க முடியம் என்ற கவலை நியாயமான கவலைதான். எத்தகைய எதிர்பார்ப்பையும் அத்தலைமுறையினரிடம் கொள்ள இயலாத நிலை, அந்த எதிர்கால வரலாற்றுச் சூழல் நிர்ப்பந்தங்களுக்கு நாம் எதுவும் செய்யமுடியாது. அடையாள உணர்வும் தாகமும் உள்ளிருந்து எழ வேண்டிய விஷயங்கள்.

( அமுத சுரபி – வெங்கட் சுவாமிநாதன் )

## புதிய சிந்தனை வேண்டும்

"... கொழும்புக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை, இடைக்காலத்துக்காகவோ அல்லது நிரந்தரமானதாகவோ கைச்சாத்திடப்படக்கூடிய நிலை தோன்றும் பட்சத்தில் அதற்கு மாற்றீடானதாக அணுகக்கூடிய எந்த ஒரு யோசனையையும் முன்வைக்க இயலாதவர்களாக முஸ்லிம் தலைவர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் சுயாட்சி மற்றும் அதிகாரப் பகிர்வுத் தொடர்பில் பாரம்பரிய அரசியல் அமைப்பியல் அணுகுமுறைகளிலிருந்து விலகி புது மாதிரியான மாற்று வழிகள் குறித்து சிந்திக்க வேண்டிய தேவை இருக்கிறது. எனினும் இது பற்றி யோசியாது அரசியல் அதிகாரச் சண்டைகளில் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்படுவதற்கு மாத்திரம் தங்களை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள்..."

( பேராசிரியர் ஜெயதேவ உயன்கொட )

## நடைமுறை வடிவம்

"முதல் முதல் இலங்கை வந்து பல இடங்களைப் பார்வையிட்ட அப்பெண்ணிடம் 'உங்களுக்கு எந்த இடம் பிடித்திருக்கிறது ?' என்று கேட்டபோது கிளிநொச்சி என்று கூறினார் அப்பெண். இலங்கையின் இயற்கை வளம் கொஞ்சும் இத்தனை இடங்கள் இருந்தும் போரில் சிதைவுற்று, முழுக்க முழுக்க செயற்கைத் தனங்களில் கட்டி எழுப்பப்படும் அந்த இடமா பிடித்திருக்கிறது என்ற கேள்வி கேட்டவரிடம் அந்த அழிவுக்குப் பக்கத்திலேயே ஓர் உயிர்ப்பும் தோன்றிக் கொண்டிருக்கிற, வாழ்வின் மீது இன்னும் நம்பிக்கை இழந்து விடாத அந்த மக்களைக் கொண்ட இடம்தான் பிடித்திருக்கிறது என்ற பதில் பெண்ணின் உடலை அல்ல ஆளுமையை வைத்து அவளைப் பார் என்பதுபோல் இருந்தது."

( தினக்குரலில் இந்திய ஊடகவியலாளர் ரேவதி )

## மறுமலர்ச்சி நடை

"வைகோவின் மறுமலர்ச்சி நடைப் பயணத்தைப் பார்ப்போம். பொடா சிறையில் 19 மாதங்கள் அடைபட்டுக் கிடந்த அந்த தியாகமும், ஆயிரம் கிலோமீட்டருக்கு மேல் ஆயிரம் தொண்டர்களோடு நடக்கும் நடைப்பயணம் என்னும் பேருழைப்பும் மதித்துப் போற்றத்தக்கவை என்றாலும் கொள்கைப் பள்ளத்தை இட்டு நிரப்பப் போதுமானவை அல்ல என்பதை வைகோ உணர வேண்டும். இல்லையேல் இந்தத் தியாகமும் இந்த உழைப்பும் ஒரு சிலரின் பதவிப் பேராசையை தீர்க்க மட்டுமே உதவும்"

( புதியபார்வை – தியாகு )

வெம்பிளி, ரூட்டிங்கில்

# GLOBAL

## EXCHANGE LTD

Money Transfer to All Over the World

## குளோபல்

எக்சேஞ்ச் லிமிடெட்
உலகத்தின் எப்பாகத்திற்கும்
பணம் அனுப்ப
நம்பிக்கையான நிறுவனம்

54, Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 3366
1081, Garrat Lane, Tooting
London SW 17 OLN

வோல்த்தம்ஸ்ரோவில்

## Shree Jewellers



வைரத்தாலிக்கொடிகள், சங்கிலிகள், காப்புகள், தோடுகள்,
மோதிரங்கள், நவரத்தினங்கள், நெக்லஸ்கள், மகரப்பதக்கங்கள்

ஸ்ரீ ஜுவல்லர்ஸ்

வாரத்தின் ஏழு நாட்களும் கடை திறந்திருக்கும் சாத்திர விதிப்படி, பொருத்தமான நவரத்தின கற்கள் பதித்து மோதிரம், பென்ரன், தோடு செய்து தரப்படும்

110, Hoe Street
Walthomstow
London E17 4QS
Tel : 020 8509 7588

வோல்த்தம்ஸ்ரோவில்



## KUMARANS
## குமரன்ஸ்
## TEXTILES

136, Hoe Street Walthamstow
London E17 4QR
Tel : 020 8521 3444, 8530 3033
Fax : 020 8521 9444

ரூட்டிங்கில்

## Yhaal House

சுத்தம், சுவை, தரம் மிக்க இலங்கை, இந்திய உணவு வகைகளை எந்நேரத்திலும் எவ்வளவு தேவையாயினும் குறைந்த விலையில் குன்றாத மணநிறைவுடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்



1, London Road, Tooting
London SW17 9JP
Tel : 020 8767 8585

ரூட்டிங்கில் முதல் தமிழ்க்கடை

## Prime Food & Wine

News Papers & Magazines, Off Licence - Grocery
Asian & Sri Lankan Groceries - Fruits & Vegetables



மணங்கவரும் மளிகைச்சாமான்கள்,
மென்பானங்கள், மதுபான வகைகள், பழங்கள்,
மரக்கறி வகைகள், மீன், இறைச்சி என
எல்லாவற்றிற்கும் குறைந்த விலையில்
நிறைந்தசேவையைப் பெற
எம்மை நாடுங்கள்

118, Tooting High Street,
London SW 17 0RR
Tel : 020 8682 3777

539 A வெம்பிளியில்

## ANGLO ASIAN CASH & CARRY

ENGLISH - ASIAN & AFRO CARIBBEAN GROCERY
FROZEN FOOD - FRUIT & VEG

TEL 020 8900 0444 அங்லோ எசியன் தமிழ்க்கடை TEL 020 8900 966

**ANGLO ASIAN CASH & CARRY**
373, Church Lane
Kingsbury NW9 8JB
Tel : 020 8200 1555 Mob : 07956 425 707

**ANGLO ASIAN CASH & CARRY**
539, High Road , Wembley HAO 2DN
Tel : 020 8900 0444 Fax : 020 8900 9666
Mob : 07956 425 707 web :www.angloasiangroup.uk

## ANGLO ASIAN

LONDON - COLOMBO COLOMBO - LONDON

Those willing to send parcels from Colombo to London and from London to Colombo by Air or by Sea are requested to contact us for such services at reduced Rates

**ANGLO ASIAN MINI MART**
*513, High Road,*
*Wembley HAO 2DN*
Tel : 020 8900 2451 Fax : 020 8903 8202
Mob : 07956 425 707

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அலறல் !

ஆடைக்குள்ளிருந்து
தாயின் வாசம்
சொட்டுச் சொட்டாய்க்
கோப்புகளில் இறங்குகிறது
அவசரமாய்
அலுவலகக் கழிப்பறையில்
நுழைந்து
பீச்சிவிடப்படும் பாலில்
தெறிக்கிறது
பசியைத் தின்று அலறும்
குழந்தையின் அலறல் !

– கவிஞர். அ. வெண்ணிலா

## அந்தரங்கம் !

அவர்கள் ஏன் உன்மீது
கல்லெறிகிறார்கள் என்றேன் !
நான் அவர்களுடைய
அந்தரங்கத்தின் கண்ணாடி
அதனால்தான் என்னை
உடைக்கப் பார்க்கிறார்கள்

– கவிக்கோ அப்துல்ரகுமான்

## குயிலுக்கு வாழ்வு கொடு

உன்னை வணங்கி நின்ற
பாரதியின் பின்னொருவன் – நின்தாள்
தன்னை வணங்குகிறேன் ...
அவனைப்போல் பாதியிலே – என்றன்
என்னையும் நீ பறித்தால்
தமிழ்ச்சாதி ஏங்கிப் போகும் ! – என்றன்
அன்னை வீழ்ந்து துடிப்பாள்
நீ என்னை அழைக்கலாமோ ?

– கவிஞர் காசி ஆனந்தன்

## சரித்திரம் தேடு !

கிளறிச்
சேகரி
கிராமியக்
கலைகள்

மலைகளில்
தோண்டு
மனித
வேர்கள்

கடல்தரை
ஆய்விலும்
கண்டெடு
வாழ்க்கை

சருகுகள்
தோறும்
சரித்திரம்
தேடு !

– கவிஞர் அறிவுமதி

## பெண் விடுதலை

தூங்கிக் கிடந்த
பாரதியின்
பாட்டுக்கள் ...
திடீரென
உயிர்பெற்றுத்
துள்ளி எழுந்தன
ஓ ...
தமிழீழத்தில் – பெண்
விடுதலை பெற்றுவிட்டாள்

– வத்தியூர் மைக்கல்

## வரலாறு !

அடையாளங்களையெல்லாம்
அழித்துவிடுகிறார்கள் !

எப்படி அறிந்து கொள்வது ...
கொலைகாரர் குரலையும்
குயில்களின் இசையையும் ?

– கவிஞர் மு. மேத்தா

## பூசணிக்காய் மகத்துவம்

மெய்வண்ண வீடுகட்ட
உனைத் தொங்க விடுகிறார்கள் ;
செய்வண்ண வேலை செய்து
திருமாடம் முடிக்கின்றாய் நீ !
பொய்வண்ணப் பூசணிக்காய் !
கறியுன்னைச் செய்து உண்டேன் ; உன்
கைவண்ணம் அங்கு கண்டேன் ;
கறிவண்ணம் இங்கு கண்டேன் !

– பாவேந்தர் பாரதிதாசன்



## மாதமிரு திருக்குறள் கற்போம் !

### மானம்

" மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் " ( குறள் 969 )

தன் உடம்பிலுள்ள மயிர்த் திரளில் ஒரு மயிர் உதிர்ந்தாலும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர்கள், தங்கள் மானத்திற்குக் கேடொன்றுவரின் அக்கணமே தன் உயிரை விட்டு மானத்தைக் காத்துக் கொள்வர்.

" இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு " ( குறள் 970 )

தமக்கு ஒரு இழிவு வந்தவிடத்து அதைப் பொறுத்துக் கொள்ளாது உயிரைவிட்டுத் தம் மானத்தைக் காத்துக் கொள்ளும் மானம் உடையவர்களது புகழ் வடிவினை உலகம் வணங்கித் துதித்து நிற்கும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில், 1917ஆம் ஆண்டு முதல் தலைமைப் பாத்திரம் வகித்தவர் அண்ணல் காந்தியடிகள். அகிம்சை என்னும் ஆயுதத்தை மட்டும் ஏந்தி, வெள்ளையர்களுக்கு எதிரான வீரஞ்செறிந்த போராட்டத்தை அவர் நடத்தினார்.

1942ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு என்று அவர் கொடுத்த முழக்கம், இந்தியாவெங்கும் நெருப்பாய்ப் பற்றியெரிந்தது. விடுதலைப்போரின் இறுதிக் கட்டமாகவும் அது அமைந்தது. வெற்றியையும் தேடித் தந்தது.

காலம் எத்தனை வேடிக்கையானது பாருங்கள்! எந்த மகாத்மா காந்தி, இங்கிலாந்து அரசை எதிர்த்துப் போராடினாரோ, அதே இங்கிலாந்து அரசு இலண்டன் மநாகரின் இதயப் பகுதியில் உலகப் புகழ்பெற்ற கண்காட்சியகம் அருகில், ரசல் சதுக்கத்தில் உள்ள பூங்கா ஒன்றில், அதே மகாத்மா காந்திக்குச் சிலை வைத்துச் சிறப்பித்துள்ளது.

அந்தச் சிலையே, நம் இதழின் இம்மாத அட்டைப்படமாய்ப் பொலிகிறது.

## " தமிழர் தகவல் "
### பொங்கல் மலர்

தமிழர் தகவல் பொங்கல் மலர் புதிய பல சிறப்புகளுடன் புதுமையாக வெளிவரவுள்ளது. இருநூறு பக்கங்கள். வர்ணத்தில் அச்சிட்டு வெளிவருகிறது. இலக்கியம், சமூகம், பொருளாதாரம், கலைத்துறை, மணவள ஈர்ப்பு என்பன இணைந்துள்ளன. ஆர்வலர் பலரின் பங்களிப்புகள் - தமிழகத்துச் செய்திகள் - படைப்புகள் பரபரப்பாக உள்ளன. மலரின் விலை £ 4.00 மாத்திரமே. தபாலில் 5.00 பவுண்களுக்கான காசோலையை அனுப்பிப் பெற்றுக் கொள்க. பொங்கலன்று உங்கள் கரம் தொடும்

– ஆசிரியர்


# M. K. SRI & CO.
## SOLICITORS & ADMINISTRATORS OF OATHS

RESIDENTIAL/COMMERCIAL CONVEYANCING ✤ IMMIGRATION AND NATIONALITY
EMPLOYMENT DISPUTES ✤ MATRIMONIAL / FAMILY
WILLS AND PROBATE ✤ WORK PERMIT
HOUSING ✤ CRIME

**Tel : 020 8515 7000 (4 lines) Fax : 020 8515 7030**
**Partners : M.K. SRITHARAN, S. SIVASANTHIRAN**

**NO. 1 CENTRAL PARADE STATION ROAD**
**HARROW MIDDLESEX HA1 2TW**

**Website : www.mksri.co.uk E-mail : info@mksri.co.uk**
**DX : 4234 HARROW (1)**

# அச்சம் என்பது மடமையடா !

**– சுகி சிவம்**

வாழ்க்கையில் எப்போதோ ஒருமுறை மரணத்தைச் சந்திருக்கிறவன் வீரன். மரணத்துக்கு மத்தியில் எப்போதோ ஒருமுறை வாழ்க்கையைச் சந்திக்கிறவன் கோழை. இந்தியா வீரர்களின் பூமியாக இருந்தது. இன்று கோழைகளின் சிறைக்கூடமாக இருந்து தொலைக்கிறது. இது அவமானப்பட வேண்டிய அசிங்கம்.

மொகலாயப் படையெடுப்பையும் அதன்பின் நடந்த ஆங்கிலேய ஆக்கிரமிப்பையும் தொடர்ந்து அடிமைத் தனம் மக்கள் மனத்தில் வேரூன்றி விட்டது. இந்த மண்ணின் மானப்பசை காய்ந்து விட்டது. காயடிக்கப்பட்ட மாடுகளைப் போல, ஆண்மை அழிந்தொழிந்த அடிமைப் புத்திக்காரர்களாக இந்திய ஜன சமூகம் இருந்தும், இறந்தும் கிடக்கிறது. இந்தியா ஜனநாயக நாடு என்பதை விட பிண நாயக நாடு என்றே எனக்குக் கோபம் கொப்பளிக்கிறது.

கூச்சம் இல்லாமல் கூட்டணி மாறும் அரசியல் வியாபாரிகள், தேர்ந்தெடுத்த மக்களுக்கும் தேர்வு செய்த கட்சிக்கும் துரோகம் இழைக்கும் அரசியல்வாதிகள், ஊழலே உருவமான பல தலைவர்கள், உழைக்காமல் பிழைக்கும் பல அரசு ஊழியர்கள், அரசியல் வெறியர்களின் அராஜகம், அக்கிரமத்திற்கு அரசு எந்திரத்தைக் கூட்டிக் கொடுக்கும் சில மானங்கெட்ட அதிகாரிகள், வாதியும், பிரதிவாதியும் செத்த பிறகு தீர்ப்பு சொல்லும் அதி மேதாவித்தனமான நீதி நியாயங்கள், எடைக் குறைவான ரேஷன், கண் எதிரில் கற்பழிப்பு, பேட்டை தாதாக்களின் ரவுடித்தனம், லஞ்சம், வஞ்சம், அநீதி, அக்கிரமம், அநியாயம் எதுவுமே இன்று இந்தியரைப் பாதிக்க வில்லை, மாறாகப் பயந்து சாகிறார்கள்.

அன்றைய பாரத புத்திரர் ' சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் ' என்று பாரதி பாடினார். இன்னும் அவனே பொலிசைக் கண்டு அஞ்சுகிறான். பண்ணையாரைக் கண்டு பயந்து நடுங்கிய காலம் போய், பாரத புத்திரன் பணத்தாசை பிடித்த பல அதிகாரிகளைப் பார்த்துப் பயப்படுகிறான். ' அச்சம் என்பது மடமையடா ' என்று கையைக் காலை ஆட்டி யாராவது பாடினால் கையைத் தட்டுகிற தமிழ்நாட்டு மக்கள் அராஜகத்தின் முன்னால் கையைக் காலைக் கட்டிக் கொண்டு பயந்து சாகிறார்கள். பயம் ... பயம்... பயம்... இதிலிருந்து வெளியே வா இந்தியனே ... வெற்றி நிச்சயம்.

ஒரு ரயில் நிலையத்தில் நான் நின்று கொண்டிருந்தேன். நான்கைந்து பிளஸ்டூ மாணவர்கள் என்னைக் காட்டிக் காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள். சன் டிவியில் பார்க்கிற பத்திரிகைகளில் எழுதுகிற சுகி சிவம் நான்தானா என்று அவர்களுக்குச் சந்தேகம். ஆனால் என்னிடம் வந்து பேச பயம். நானே அவர்களை அருகில் அழைத்து அறிமுகப் படுத்திக் கொண்டேன். என்னைப் பார்த்துப் பேச ஏன் பயப்பட வேண்டும். இளைய பாரதத்தைப் பார்த்து எனக்குக் கவலையாக இருக்கிறது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஒரு மாணவன் தயங்கித் தயங்கி ஆட்டோகிராஃப் கேட்டான். பொதுவாக நான் ஆட்டோகிராஃப் வாங்குவதை விரும்புவதில்லை. அதனால் எந்தப் பயனும் இல்லை என்பது என் கோட்பாடு. இருந்தும் அவனைக் காயப்படுத்தாமல் '' தம்பி ! ஆட்டோகிராஃப் வாங்குபவனாக இராதே... அவசியம் என்றால் போடுகிறவனாக இரு '' என்றேன். இதை விட அந்த இளைஞனுக்கு நான் வேறு நல்லது என்ன சொல்ல முடியும். மாணவன் முகம் வாடிவிட்டது.

இன்றைக்கு மாணவர்கள் ஆசிரியரோடு பேசப் பயப்படுகிறார்கள். ஆங்கிலத்தில் பேச அதிகமாகவே பயப்படுகிறார்கள். பயப்படாதே! ஆங்கிலத்தில் சரியாகப் பேச முயற்சி செய்! தவறாக இருந்தாலும் கவலைப்படாதே ... பேசு ... அது ஆங்கில மொழி. அதைச் சரியாகப் பேசாவிட்டாலும் குற்றமில்லை. இந்தியருக்கு ஆங்கிலேயர் செய்த குற்றங்களோடு ஒப்பிட்டால் இது மிக மிகச் சிறியது.

யாராவது தவறைச் சுட்டிக் காட்டினால் வெட்கப்படாதே. நன்றி சொல். பிழையின்றி ஆங்கிலம் பேச அவர் உனக்கு உதவ முடியுமா என்று கேள். மகாத்மா காந்தியின் ஆங்கிலத்தில், ரைட் ஹானரபிள் சீனிவாச சாஸ்திரி பிழை கண்டபோது காந்தி அப்படித்தான் உதவி கேட்டார். அப்படிக் கேள். உருப்படுகிற வழியைப் பார் ... பயப்படாதே ... வீரனாகவே இரு ! அடிக்கடி சாகாதே. ஒருமுறைதான் சாகவேண்டும். எவ்வளவு பெரிய மனிதரைப் பார்க்க நேர்ந்தாலும் துணிவுடன் நேராகப் பார். குழப்பம், தலைகுனிதல், தயக்கம், பயம், உளறல் இவற்றைத் தூக்கிக் குப்பையிலே போடு. இளைய பாரதமே ஜெயிக்கிற வழியைப் பார்.

ஔரங்கசீப் டில்லி பாதுஷாவாக இருந்தபோது அம்பர் என்கிற சின்ன நாட்டிற்கு ஜெய்சிங் என்கிற பதின்மூன்று வயதுச் சிறுவன் பட்டத்திற்கு வந்தான். அவனைப் பயமுறுத்தி வைக்கும் எண்ணத்தில் டில்லிக்கு வரும்படி பணித்தார் பாதுஷா. அவனது தாயும் அமைச்சர்களும் அஞ்சினர். ஆனால் சக்கரவர்த்தியின் முன்பு நடந்து கொள்ள வேண்டிய மரபுகள் முறைகளைக் கேட்டறிந்து ஜெய்சிங் டில்லி சென்றான். சிங்கக்குட்டியைப் போல் தன்முன் வந்து நின்ற ஜெய்சிங்கை ஔரங்கசீப் உற்றுப் பார்த்தார். நம்மைக் கண்டு இவனுக்குப் பயம் வரவில்லையே என்று கோபம் அடைந்த பாதுஷா சிம்மாசனத்தில் இருந்து திடும் என்று குதித்து ஜெய்சிங் அருகில் வந்து அவன் கைகளைப் பிடித்தார். பற்களை நறநறவென்று பயமுறுத்தும் பாணியில் கடித்தார். ஜெய்சிங் அஞ்சவில்லை, அசரவில்லை. ஔரங்கசீப் ஆச்சரியமடைந்தார்.

ஜெய்சிங்கின் கைகளை இறுக்கியபடி சிறுவனே ! உனக்குப் பயமாக இல்லையா இப்போது நான் உன்னைத் தண்டித்தால் என்ன செய்வாய்? எப்படிக் காப்பாற்றிக் கொள்வாய் என்றார். ஜெய்சிங் சிரித்துக் கொண்டு, இத்தனைப் பெரிய டில்லி பாதுஷாவே என் கைகளைப் பிடித்து எனக்கு அடைக்கலம் கொடுத்திருக்கும்போது நான் எதற்குப் பயப்பட வேண்டும் என்று சாமர்த்தியமாகப் பதில் கூறினான்.

அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து '' பலே '' என்று பாராட்டி ஆசனம் அளித்தார் ஔரங்கசீப் என்கிறது வரலாறு ! அச்சமின்மையை அங்கீகரித்துக் கௌரவித்த ஔரங்கசீப்பின் குணநலன் வித்தியாசமானது. உண்மையில் பாராட்டத் தக்கது. அச்சத்தை வென்றால் வெற்றி நிச்சயம்.

# LinkAIR Travels Limited



IATA 91-2 5704 0

SriLankan

Special Fares to : Colombo, Madras, Singapore, Canada

We can also arrange : COLOMBO - JAFFNA - COLOMBO

361 London Road, Croydon, Surrey CRO 3PB

Tel : 020 8665 0206 Fax : 020 8669 8579



புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்

# Katpakam

**36, Loampit Hill, Lewisham**
**London SE 13 7SW**
**Tel / Fax : 020 8694 8810**

ஞாயிறு தோறும் உடன் பங்கு
ஆட்டிறைச்சி
சகலவிதமான மரக்கறி வகைகள்
பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய
ஒரே இடம்

துரிதப் பணமாற்றுச் சேவை

ரஞ்சன் – இலண்டன்





இளைய கானக்குயில் 2004

இலண்டன்
கிரீன்போல்ட் மண்டபத்தில்
9.10.2004 மாலை 5 மணிக்கு
நடைபெறும்

தொடர்புகட்கு : 020 8390 5823

# மனிதனின் முதலாளி

**– தென்கச்சி சுவாமிநாதன்**

" இன்றைய மனிதனை ஆட்டிப் படைப்பது மனமா ? பணமா ? "

என்னுடைய நண்பர் ஒருவர் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார்.

" மனிதனை ஆட்டிப் படைப்பது மனம்தான் " என்றேன்.

" இல்லை, பணம்தான்! " என்றார் அவர்.

"எப்படிச்சொல்கிறீர்கள்?" என்றேன்.

இந்தக் கதையைக் கேளுங்கள் என்றார்.

அவர் சொல்ல ஆரம்பித்தார்.

ஓர் ஊரில் ஒரு வயதான பெரியவர் இருந்தார்.

அவருக்கு வயது 70

மிகப் பெரிய கோடீசுவரர்

அவர் ஒரு நாள் தன் நண்பர்களையெல்லாம் கூப்பிட்டு ஒரு விருந்து வைத்தார்.

" இது ஒரு முக்கியமான விருந்து ... எல்லோரும் வாருங்கள் ! " என்று அழைப்பு விடுத்தார்.

எதற்காக அந்த விருந்து என்பது தெரியாமலே எல்லோரும் வந்து சேர்ந்தார்கள்.

வந்தவுடன் அந்தக் கோடீசுவர முதியவர் அவர்களைப் பார்த்து அறிவித்தார்.

" நண்பர்களே ! ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இந்த விருந்து. எனக்கும் ஒரு பதினெட்டு வயது பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமாகியிருக்கிறது...

இதுதான் அந்த மகிழ்ச்சியான செய்தி ! "

எல்லோருக்கும் அதிர்ச்சி.

அவர்கள் யோசித்தார்கள்.

இவருக்கு வயது 70. அவளுக்கு வயது 18. இது எப்படி ?

வந்த விருந்தினர்களில் ஒருவர் மெல்ல அந்த முதியவரை நெருங்கினார்.

" ஏங்க ... நான் கேக்கிறேனே ...ன்னு தப்பா நினைக்காதீங்க ... "

" இல்லே .... கேளுங்க ! "

" இந்தக் கல்யாணத்துக்கு அந்தப் பொண்ணு முழு மனசோடு சம்மதிச்சாளா ! "

" முழுமனசோடு சம்மதிச்சது மட்டுமில்லே... கல்யாணத்தை சீக்கிரமே வச்சிக்கணும்ன்னு வேறே ஆசைப்படுறா ... "

" இது எப்படி முடியும் ? நீங்க உங்களுக்கு வயசு எழுபதுங்கறதைச் சொன்னீங்களா ? "

" இல்லை .... "

" அதானே கேட்டேன் ! "

" அதைக் கொஞ்சம் மாத்திச் சொன்னேன் ... ! "

" எப்படி ? "

" எனக்கு 95 வயசுன்னு சொன்னேன் ... அவள் சந்தோஷமாக சம்மதிச்சாள் ... சீக்கிரமே கோடிக் கணக்கான சொத்துக்கள் அவளுக்குச் சேர்ந்துடும்ங்கற நம்பிக்கையிலே சம்மதிச்சுட்டா ! "

நண்பர் கதையை முடித்தார்.

நான் யோசிக்க ஆரம்பித்தேன்.

காலம் ரொம்பவும்தான் மாறிப் போயிருக்கிறது !

இன்றைய நிலையில் –

பணம் இருப்பவன் முதலாளி அல்ல.

பணம் தான் மனிதனுக்கு முதலாளி !

## சீ ரு டை

சீருடை என்பது தனித்தன்மையை மறைத்து, சமத்துவத்தைக் காட்டவே ஏற்படுத்தப்பட்டது என்றால் மிகையில்லை. வசதி குறைந்தோர், வசதியுள்ளோரைப் பார்த்துத் தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல் இருக்கச் சீருடை மிகவும் உதவுகிறது. அந்தப் பள்ளிச் சீருடை அழகான நிறம். இந்தப் பள்ளிச் சீருடை அழகான டிசைன் என்று மாணவர்கள் கூட ஒப்பிடுகிறார்கள். சமத்துவத்துக்கென்று ஏற்படுத்தப்பட்ட சீருடை வித்தியாசங்களினால் வேறுபாடுகள் நிலவுவது விநோதம் மட்டுமில்லை. ஒரு முரண்நகையும் கூட.

கணக்கெடுக்கப்பட்ட பெரும்பான்மையோர், சீருடையில்லாமல் சாதாரண உடையுடுத்திப் பள்ளிகளுக்குச் செல்லவே விரும்புகின்றனர். உடை ஒருவரது குணநலன்களை ஓரளவிற்கேனும் சொல்கிறது என்றும் அவர்களில் பெரும்பாலோர் நினைக்கின்றனர். ஒருவரின் உடை அவரது விருப்பம், சௌகரியம் என்று இவர்கள் நம்பினாலும் உடை காரணமாய்க் கேலி செய்யப்பட்டோரின் எண்ணிக்கையும் கணிசமானதாய் இருக்கிறது. ஜீன்ஸ் பின்புறமும் டீ சட்டையின் மீதும் எழுதப்பட்டிருக்கும் 'வாசகங்கள்' பார்ப்பவரின் / படிப்பவரின் மனநிலையைப் பாதிக்கிறதென்று அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். சீருடை இல்லாத மேற்கத்தியப் பள்ளிகளிலேயே கூட மினிஸ்கர்ட், ஷார்ட்ஸ், வயிறு தெரியும் சட்டைகள் போன்றவற்றை உடுத்தக் கூடாது என்ற விதியிருக்கிறது.

அமெரிக்காவில் மட்டும் 25 மில்லியன் பேர் இராணுவம், தேவாலயம், மருத்துவமனை, உணவகம், விளையாட்டுத் துறை, பள்ளிக்கூடம் என்று எல்லா இடங்களிலும் ஏதோ ஒருவகைச் சீருடையை அணிகிறார்கள். பொதுவாகச் சீருடை என்றாலே ஒருவர் எந்தத் துறையைச் சார்ந்தவர் என்ற அடையாளம் கொடுக்கக்கூடியது. அங்கு தனி நபரின் திறமை மற்றும் குணநலன்களைக் கடந்து நிற்பது இதுவே. இரண்டாம் உலகப் போரின் போது இத்தாலியப் போர்வீரர்களைக் கிண்டலடித்தனராம் மற்ற நாட்டு வீரர்கள். எதற்காகத் தெரியுமா ? இத்தாலிய வீரர்களின் தொப்பிகள் (hats) பறவையிறகுகள் மற்றும் குதிரைவால் உரோமங்கள் கொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. இராணுவத்திற்குச் சற்றும் சம்பந்தமேயில்லாத அவ்வகை அலங்காரம் பெண்மையைக் காட்டியதாக எண்ணினர். ரஷ்ய இராணுவத்தினர் தோள் பட்டைகளை (Shoulder boards)மிகவும் விரும்புகின்றனர். ஜெர்மானிய வீரர்களுக்குக் கருப்பு மிகவும் பிடித்த நிறமாம்.

சீருடை, தொழிலாளியின் பாதுகாப்பைக் கூட உறுதி செய்யக் கூடியது. பிளாண்டுகளிலோ அது போன்ற தொழிற்சாலைகளிலோ ஹெல்மெட் முதல் கால் பூட்சுகள் வரை எல்லாமே கட்டாயச் சீருடையாகின்றன. முரட்டுப் பருத்தியில் தீபோன்ற விபத்துகளிலிருந்து உடலைக் காக்கும்படி உடுத்துவர்.

# சைவச்சிறார்கள் சமயச்சூழலில் கற்க வசதி செய்த இந்துபோர்ட்

திருமதி. மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்
முன்னாள் அதிபர்
இராமநாதன் கல்லூரி

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கல்விப் பணியாற்றிச் சைவ மக்களுடைய, கல்விமான்களுடைய, பாராட்டுக்குரியவராக விளங்கியவர் மதிப்புக்குரிய இந்துபோர்ட் இராஜரத்தினம். அன்னார் ஆற்றிய பணிகள் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டம், தீவுப் பகுதி ஆகிய பெருநிலப்பரப்பில் பரந்திருந்தது.

இதன்மூலம், மேற்கூறிய இடங்களில் வறுமை காரணமாகப் பாடசாலை சென்று கற்கமுடியாத சிறுவர், சிறுமியர்கள் பலரும் சைவ சமய மரபுகளைப் பேணி, சமயச் சூழலிலே வளரவும், கலை, கலாசாரத்தை வளர்த்துக் கல்வி கற்கவும் ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

இன்று அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் பாடசாலைகளுக்குப் பல துறைகளில் உதவி செய்கின்றன. வேற்று மதத்தவர்களுக்கு மதச் சார்புள்ள நிறுவனங்கள் ஆதரவு வழங்குகின்றன. ஆனால் தனி மனிதனாகத் தமிழ் மக்கள் வாழுமிடங்களில் பாடசாலைகளை நிறுவிய பெருமை இந்துபோர்ட் சு. இராஜரத்தினத்தையே சாரும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தலை சிறந்த அறிஞர்களும், கல்வியில் ஈடுபாடுடைய வர்களுமாகிய சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி, அ. சபாபதி, எம்.எஸ். இராஜரத்தினம், எஸ். கந்தையா ஆகியோர் சேர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமையில் கூடி 09.12.1923இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை ஸ்தாபித்தனர். இதுவே ( Hindu Board of Education) என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. சங்கத்தின் நோக்கம் நாட்டின் பல பகுதிகளிலும் சைவப் பாடசாலைகளை நிறுவிச் சைவச் சூழலிலே கல்வி வழங்குவது (விசேடமாக ஏழைப்பிள்ளைகளுக்கு ) ஆகும்.

‘ இந்துபோர்ட் ’ இராஜரத்தினம் கோப்பாயைச் சேர்ந்த கதிரேசர் சுப்பிரமணியத்துக்கும் வல்வெட்டியைச் சேர்ந்த பெருவள்ளல் குமாரசுவாமி மீனாட்சிப்பிள்ளைக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். இளமைப் பருவத்தில் இவரது தாய்மாமன் நீதிபதி வைமன் கதிரவேற்பிள்ளை சு.இராஜரத்தினத்தையும்சகோதரர்களையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றார். இவர் யாழ். மத்திய கல்லூரியில் கற்ற காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் மிக ஆர்வமுடையவராய் விளங்கினார்.

திண்ணைப் பள்ளிக்கூட முறையில் சட்டம்பி அம்மாவிடம் சமயம், தமிழ்க் கலாசாரப் பண்புகள் என்பவற்றைக் கற்ற இராஜரத்தினம், பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களிடையே சகல விதத்திலும் முன்னணியில் நின்றார் என்றால் மிகையில்லை. அத்துடன், பல்கலைக்கழக முதல்நிலைப்பட்டப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்று பெற்றோரையும், மாமனாரையும் பெருமிதம் அடையச் செய்தார்.

இருமரபுப் பெருமையும், சைவாசாரசீலமும், பல்கலைக்கழகப் பட்டமும், கிரிக்கெட் விளையாட்டில் திறமையும் ஒருங்கே அமையப் பெற்ற இராஜரத்தினம் அவர்கள் 24ஆம் வயதில் சட்டத்தரணியாக - அப்புக் காத்து திறமைச் சித்திபெற்றார். ஓய்வு காலங்களில் கீரிமலை சென்று நீச்சலிலும் வல்லவராகினார். அக் காலத்தில் கீரிமலை அருணாசல உபாத்தியாரின் தொடர்பு இவருக்குக் கிட்டியது. வித்தியா பகுதியினருக்கு அருணாசல உபாத்தியார் மூலம் மொழிபெயர்த்து உதவியதால் கல்வி தொடர்பான சட்ட திட்டங்கள் பற்றியும் இவர் அறிந்து கொண்டார்.

நீதிபதி வைமன் கதிர்வேற்பிள்ளை நாவலர் பெருமானுடன் மிக நெருங்கிய தொடர்புடையவர். எனவே, தாய்மாமன் பராமரிப்பில் வளர்ந்த இராஜரத்தினம் அவர்களும் நாவலருடைய சமயப் பணிகளாலும், பிரசாரத்தினாலும் நன்கு கவரப்பட்டதில் வியப்பில்லை. இதனால், நாவலர் பெருமான் வழிநின்று சமயப் பணியாற்ற விரும்பிச் செயற்படத் தொடங்கினார்.

பரம்பரை பரம்பரையாக சைவ மக்கள் வாழும் மாதகல் கிராமத்தில் முதன்முதலாகச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் விக்கினேஸ்வரா பாட சாலையை அமைத்தது. இதனைத் தொடர்ந்து நெடுந்தீவு, புங்குடுதீவு, மண்டைத்தீவு, வேலணை, சங்கானை, இளவாலை, எழுவைதீவு, காரை நகர், நாகர் கோவில், உருத்திரபுரம், வவுனியா, புத்தளம், முந்தல், வட்டக்கச்சி, பல்லவராயன்கட்டு ஆகிய இடங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இவ்வாறு 1953ஆம் ஆண்டு 121 பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இத்துடன், குடிசைக் கைத்தொழில் நிலையங்களும், பன்னவேலை நிலையங்களும் அமைக்கப்பெற்றன. நாட்டின் பலபாகங்களிலுமுள்ள பிரபுக்கள், சைவ அபிமானிகள், கொடை வள்ளல்கள் ஆகியோரை அழைத்துச் சைவமக்களின் முக்கியத் தேவை கல்வி எனவும், அதற்குப் பல பாடசாலைகளை அமைக்க வேண்டும் எனவும் எடுத்துக் கூறிப் பணம், பொருள் என்பனவற்றைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு வருடந்தோறும் பாட சாலைகளின் தொகை அதிகரித்து வந்தது. பெண்கள் கல்விக்கும், ஆங்கில மொழிக் கல்விக்கும், முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. செங்குந்த இந்துக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயம், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடி ஆங்கிலப் பாடசாலை என்பன ஆங்கில மொழிக்கல்வி புகட்டுவதற்கென ஆரம்பிக்கப்பட்டன. வித்தியா பகுதியினருக்கு மொழிபெயர்த்து, பல ஆவணங்களைத் தயாரித்துக் கொடுத்ததினால் சட்டதிட்டங்களை நன்கு நுட்பமாக அறிந்து பாட சாலைகளை நிர்வகிக்க முடிந்தது.

இந்துபோர்ட் இராஜரத்தினம் அவர்கள் அடக்கமாகவும் அமைதியாகவும் திரிகரண சுத்தியுடனும் தன்னையே கல்விப் பணிக்கு அர்ப்பணித்தார். கல்வியில் ஆர்வமுள்ளவர்களை நாடித் தங்கள் ஊரிலேயே பாடசாலைகளை அமைக்குமாறு உற்சாகப்படுத்திப் பல

பாடசாலைகள் உருவாக வழிவகுத்த பெருமை அவரைச் சாரும்.

தனது பணிகளைத் திறம்படச் செய்யத் தனது மோட்டார் வாகனத்தையும், நியாயவாதித் தொழிலையும் அர்ப்பணித்தமை அவரின் சேவை மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு முப்பத்தைந்து வருடங்களின் பின்னர் 187 பாடசாலைகள் அமைக்கப்பெற்றன. எனவே, சைவ ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவியது. திருநெல்வேலியைச் சேர்ந்த அட்வகேட் ரி. இராசேந்திரம் அவர்கள் நாற்பது பரப்பில் அமைந்துள்ள தனது பெயரில் இல்லத்தைப் கொடுத்துதவ, சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலை 1925ஆம் ஆண்டு விஜயதசமியன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்துபோர்ட் இராஜரத்தினம் அவர்கள் ஆற்றிய பணி காரணமாக ஓர் நிறுவனத்தின் பெயர், மதிப்புக்குரிய இராஜரத்தினம் அவர்களைக் குறிக்க எல்லோரும் அவரை அன்பாக '' இந்துபோர்ட் இராஜரத்தினம் '' என அழைத்தனர். இறுதியாக ''இந்துபோர்ட்'' என்றால் பெரியார் இராஜரத்தினம் எனலாம். இரண்டாவது அரச சபைக் காலத்தில் (1936–1941) சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா கல்வி மந்திரியாக விளங்கினார். கல்வித்துறையில் மாற்றம் செய்ய நியமிக்கப் பெற்ற கல்வி ஆணைக்குழு சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவின் பெருமதிப்புக்குரிய இந்துபோர்ட் இராஜரத்தினம் ஒரு பிரபல்யமானவராக விளங்கிய காரணத்தால் அவரைச் சந்தித்து அவருடைய உயர்ந்த கருத்துக்களைப் பெற்றது.

1935ஆம் ஆண்டு தொடக்கம் பிரதி சனிக்கிழமைதோறும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கான வகுப்பும், யாழ் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பாலபண்டித வகுப்புகளும் இலவசமாக நடைபெற்றன.

நான் சிறுமியாக இருந்த காலத்தில் மிக உயர்ந்த ஒருவர் நெற்றியில் விபூதி, சந்தனப்பொட்டு, முழந்தானைத் தொடத்தக்கதாக கோட், வேட்டியணிந்து, மீசையுடன் கம்பீரமாக மோட்டார் வாகனத்தில் எமது இல்லம் வந்து தந்தையாருடன் கதைப்பது வழக்கம். ஆனால், நான் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடைமையாற்றிய காலத்தில் இந்துபோர்ட் பற்றி நன்கு அறிந்து பெருமைப்பட்டேன்.

கலாசாலைக்கு அருகில் அமைந்த சைவச் சிறுவர்களுக்கான அநாதை இல்லம் மீது அவர் மிக அக்கறையுடன் செயற்பட்டார். அங்குள்ள பிள்ளைகளைத் தமது சொந்தப் பிள்ளைகள் போல் நடத்தினார். அவர் நிறுவிய கல்விச் சாலைகளும், சிறுவர் இல்லமும் என்றும் அவர்பெருமையை பேசுவனவாகவுள்ளன. எனவே எழுத்தறிவித்தவன் என்றும் இறைவனாகப் போற்றப்படுவார் என்பது முற்றிலும் உண்மை.

( நன்றி – உதயன் பத்திரிகை )

***


ALL UNDER ONE ROOF

SKC

SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

SOLICITORS & ESTATE AGENTS

Sales, Letting & Management

- வீடு மற்றும் வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல், வாடகைக்கு விடுதல்.
- அனுபவம் மிக்க சட்டத்தரணிகளின் ஆலோசனைகள், சேவைகள் எல்லாமே ஒரே கூரையின் கீழ் செய்து கொடுக்கப்படும்.
- வீடுகளுக்கும் வியாபார நிலயங்களுக்குமான சகல விதமான வங்கி கடன் உதவிகளும், காப்புறுதி திட்டங்களும் சுயாதீனமான தரகர்களின் மூலம் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- வடமேற்கு லண்டனில் உள்ள பல்வேறு எஸ்ரேற் ஏஜென்டுகளை தமது ஏஜென்டுகளாக நியமித்து விரைவிலே வீடுகளை விற்பனை செய்கிறோம்.
- சட்டத்தரணிகளின் தொழில் தர்மம் எல்லா வகையிலும் பேணப்படும் ஒன்றென்றால் நாம் Law Societyயினால் நெறிப்படுத்தப்படுபவர்கள்




557 High Road
Wembley, Middlesex
HA0 2DW

Opening Hours
Mon-Fri: 9am - 6pm
Sat: 9.30am-5pm

Tel: 020-8795 0648
Mobile: 07831 195 979
Fax: 020 8795 0649

## ஒக்டோபர் ஐந்து !

திருவில் வெளி !
களங்கமற்ற பன்னிருவர்
கலத்தினிலே பயனித்தனர்
மறுகரையை அடையுமுன்னே
சிறுமதியர் குறுக்கிட்டுத்
தடுத்திட்டனர்.
தன்மானம் மிக்கவர்
தமிழ் மறவர் இவர்களிடம்
ஆயுதங்கள் இல்லை –
அந்நியனை நம்பியதால்
அடலேறுகள் கரையிறக்கப்பட்டனர்
'' கடற்புறா '' தன் பயணத்தைப்
பாதியிலே நிறுத்திக் கொண்டது
அப்புறம் –
வஞ்சகர் வலையில் வீழ்ந்த
'' கவரிமான்கள் '' ஒவ்வொன்றாய்
தம்மை அழிக்கச்
' சயனைட் ' உட்கொண்டு
தம்முயிர் மாய்த்தனர்
அன்று வீரகாவியம் படைத்த
வேங்கைகட்காக – இன்று
விம்முகின்ற நெஞ்சம்
நாளை பொங்கி எழுந்து
புதிய வரலாறு படைக்கும் !

– இளந்திரையன்

## நிகழ்வுகள் நடந்தவை

இந்த மாதம் 14 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை வோல்த்தம்ஸ் ரோவில் கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவத்தில் தமிழ்நாட்டில் தலைசிறந்த ஆன்மீகப் பெரியார் சுகி சிவம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவரை தீபம் தொலைக்காட்சியினர் அழைத்து ஆன்மீகக் கலந்துரையாடல் ஒன்று நடத்தியது. அது பொதுமக்களின் மதிப்பைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## தமிழில் கையொப்பம் !

கொல்கத்தா எனும் அன்றைய கல்கத்தாவில் ஒரு விஞ்ஞானிகளின் ஒன்று கூடல் நடந்தது. தங்கள் ஆய்வுகள் பலவற்றை அங்கே பல விஞ்ஞானிகள் சமர்ப்பித்துச் சிறப்புரை ஆற்றினார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் சமூகமளித்தோர் அனைவரும் கையொப்பமிட்டிருந்தனர். பல ஆண்டுகளுக்குப்பின் இக்குறிப்பேட்டைப் பார்வையிட்ட தமிழ்நாட்டுப் பேராசிரியர் ஒருவர் திகைத்துப் போனார். அந்தக் குறிப்பேட்டில் ஒரே ஒரு அழகான தமிழ்க் கையொப்பம் பளிச்செனத் தெரிந்தது. நமது பெருமைக்குரிய விஞ்ஞானி டாக்டர். சி.வி.ராமனுடையதுதான் அது.

## வாசகர்களுக்கு !

நீங்கள் தினசரி வாங்கும் பொருட்கள் எவை? அவற்றை ஏன் விரும்பி வாங்குகிறீர்கள்? அவை எவற்றின் தயாரிப்புகள்? எவ்வளவு காலமாக வாங்குகிறீர்கள்? மாறுபட்ட தயாரிப்புகளை வாங்குகிறீர்களா? நீண்ட நாட்களாக நீங்கள் வாங்கும் பொருட்கள் பற்றிய உங்கள் விசேடமான அபிப்பிராயம் என்ன? எந்த நிறுவனத்தின் தயாரிப்புகள் உங்களுக்குப் பிடித்தமானவை? தமிழர் தகவல் உங்களிடமிருந்து இத்தகவல்களை எதிர்பார்க்கிறது. இதை வைத்து ஒரு புதிய செய்திப் பக்கத்தை உருவாக்க முயற்சிக்கிறோம். நிச்சயமாக ஒத்துழைப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

## ஒரு கருத்துக் கணிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், 1992 ஆம் ஆண்டு இந்திய அரசால் தடைசெய்யப்பட்டது. பிறகு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை அத்தடை புதுப்பிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

இதனையொட்டிச் சென்னை, லயோலா கல்லூரி மாணவர்கள், கடந்த ஜூலை மாதம் ஒரு கருத்தறியும் முயற்சியை மேற்கொண்டனர். அதன் முடிவுகள் இப்போது வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளின் மீதான தடையை நீக்கவேண்டும் என்று 54.2 விழுக்காட்டு மக்களும், நீக்கக் கூடாது என்று 45.8 விழுக்காட்டு மக்களும் வாக்களித்துள்ளனர்.

எனவே, தடை நீக்கப்பட வேண்டும் என்பதே பெரும்பான்மைத் தமிழ் மக்களின் விருப்பமாக உள்ளது என்பது புலனாகிறது. இதனைத் தமிழக அரசும், நடுவண் அரசும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, தடையை நீக்க ஆவன செய்திடல் வேண்டும்.

அதே மாணவர் குழுவினர், பொடா சட்டம் நீக்கப்பட வேண்டுமா, கூடாதா என்பது குறித்தும் கருத்தறியும் பணியை மேற்கொண்டுள்ளனர்.

வாக்களித்தவர்களில் 61 விழுக்காட்டினர் பொடா சட்டம் நீக்கப்படுவதை வரவேற்றுள்ளனர். மீதமுள்ள 39 விழுக்காட்டினருள்ளும், 15 விழுக்காட்டு மக்கள், பொடாவை விடக் குறைந்த அதிகாரமுடைய ஒரு புதிய சட்டம் இயற்றினால் போதும் என்று கூறியுள்ளனர். எனவே, 24 விழுக்காட்டினர் மட்டுமே, பொடா சட்டம் நீடிப்பதை விரும்புகின்றனர்.

## வாசகர் கடிதங்கள் பற்றி ....

தமிழர் தகவலுக்கு வரும் ஆசிரியர் கடிதங்கள் முகவரி முழுமையாகக் குறிப்பிடப்பட வேண்டியது அவசியம். முகவரியைத் தாங்கள் விரும்பாவிடில் புத்தகத்தில் பிரசுரிக்க மாட்டோம். முகவரி இல்லாத நல்ல கருத்துக்கள் கொண்ட கடிதங்களாக இருந்தாலும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்

– ஆசிரியர்

# குறுகத் தரித்த குறள்

– சுப. வீரபாண்டியன்

அறிவு மூவகையானது.

மெய்யறிவு, நூலறிவு, பட்டறிவு என அவற்றைக் குறிப்பர்.

பரம்பரையின் மூலமும், சிந்தனையின் மூலமும் வருவது மெய்யறிவு. நூல்களைப் படிப்பதாலும், முறையான கல்வியாலும் பெறுவது நூலறிவு. சுற்றுக் சூழலாலும், அனுபவத்தாலும் அடைவது பட்டறிவு.

மூன்றும் மனிதர்க்குத் தேவை. மூன்றிலும் தேர்வதே முழுமையான ' அறிவு '. மூன்றையும் பயன்படுத்தி, மெய்ப்பொருள் காண்பதே பகுத்தறிவு.

இவை எல்லாவற்றைப் பற்றியும் வள்ளுவர் கூறியிருக்கின்றார்.

அறிவுக்கும், தந்திரத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும், வள்ளுவர் நுட்பமாக உணர்த்தியிருக்கின்றார். இன்றைக்கும், வஞ்சகம் மிக்க தந்திர உத்திகளை அறிவு என்று போற்றுவது உலக வழக்காக உள்ளது.

வள்ளுவர் அந்த மாயையிலிருந்து நம்மை விடுவிக்கின்றார்.

அடுத்தவனை ஏமாற்றுவதற்கும், புத்திசாலித்தனம் தேவைதான். ஓர் இருட்டில், கள்ளச்சாவி போட்டு இன்னொருவன் வீட்டைத் திறந்து கொள்ளையடிப்பதற்கும் திறமை தேவைப்படவே செய்கிறது. ஆனால் இவை எல்லாம் அறிவு அன்று என்கிறார் வள்ளுவர்.

அப்படியானால் அறிவு என்பது தான் என்ன ?

மிகச் சுருக்கமாய், மிக அழுத்தமாய், '' நன்றின் பால் உய்ப்ப தறிவு '' என்கின்றார்.

எந்த ஒன்று, தன்னையும், தான் சார்ந்திருக்கும் சமுகத்தையும் நன்மையை நோக்கி இட்டுச் செல்கின்றதோ அதுவே அறிவு என்று வள்ளுவம் விளக்குகின்றது.

அத்தகைய அறிவு நம்மிடம் இருக்குமானால், அஃது ' அற்றம் காக்கும் கருவி ' என்கின்றார். அறிவு ஒன்றுதான் அழிவிலிருந்து மனித குலத்தைக் காக்கும் கருவியாக இருக்கமுடியும் என்பது சரிதானே. அது மட்டுமல்லாமல், பகைவர்களால் வெல்ல முடியாத அரணாகவும் அறிவு உள்ளது என்று அடுத்த வரி சொல்கின்றது.

கருவியாகவும், அரணாகவும், அதாவது வாளாகவும், கேடயமாகவும் அறிவு உள்ளது என்பது வியத்தகு உண்மையாக இருக்கிறது.

அதனால்தானோ என்னவோ, ' அறிவுடைமை ' அதிகாரத்தின் இறுதிக் குறளில், '' அறிவுடையார் எல்லாம் உடையார் '' என்று கூறி, அதன் உச்சத்தை நமக்கு வள்ளுவர் புரிய வைக்கின்றார்.

இவ்வாறு அறிவைப் புகழ்ந்தும், வியந்தும் பத்துக் குறள்பாக்களைப் படைத்த வள்ளுவர், வேறு அதிகாரங்களின் கீழும், சிலவிடங்களில் அறிவைப் போற்றுகின்றார்.

அறிஞர் பெருமகனான வள்ளுவர், அறிவைப் போற்றுவதில் என்ன வியப்புள்ளது என்று நீங்கள் கேட்கலாம்.

அதில் வியப்பொன்றும் இல்லைதான். ஆனால், அறிவைப் பலவிடங்களிலும் புகழந்த வள்ளுவர், இன்னொரு குறளில், அறிவினால் ஆகுவதுண்டோ ? என்று கேட்கிறாரே, அதுதான் வியப்பாக உள்ளது.

அறிவை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும், அறிவு எதற்குப் பயன்படும் என்று திருக்குறள் நம்மைப் பார்த்துக் கேள்வி எழுப்பும்போது நாம் திகைத்துப் போகிறோம்.

ஏன், குறளில் இப்படி ஒரு கேள்வி என்பதற்கு, அக்குறள் முழுவதையும் படித்தால்தான் விடை கிடைக்கும்.

'' அறிவினால் ஆகுவ துண்டோ
பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை ''
என்பது குறள்.

இப்போது நமக்குப் புரிகின்றது. மற்றவர்களின் துன்பத்தைத் தன் துன்பம் போலக் கருதாதவனிடம் அறிவு இருந்து என்ன பயன் என்பதே கேள்வி.

அறிவு சிறந்ததுதான். ஆனாலும் மனிதநேயமற்ற அறிவு, அழிவுக்கே இழுத்துச் செல்லும் என்பதுதானே உலக வரலாறு.

' மனித நேயம் ' என்பது கூடப் பொருத்தமான சொல் இல்லை என்றே தோன்றுகிறது. ஏனெனில் பிறரின் நோய் என்று கூறாமல், ' பிறிதின் நோய் ' என்று அஃறிணையில் கூறியிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பிற மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், பிற உயிர்களுக்கு நேரும் துன்பத்தையும் நாம் உணரத் தக்கவர்களாக, அதாவது ' உயிர்நேயம் ' உடையவர்களாக விளங்க வேண்டும் என்பதே திருக்குறள் வகுக்கும் பாதை.

ஆகவேதான், ' அறிவுடைமை ' பற்றிப் பொருட்பாலில் குறிப்பிட்ட வள்ளுவர், உயிர் நேயத்தின் உயர்வு பற்றி அறத்துப்பாலிலேயே விளக்கி விடுகின்றார்.

' அறிவினால் ஆகுவதுண்டோ ' என்னும் கேள்வி அறத்துப்பாலில் உள்ளது. அந்தக் கேள்வியைப் புரிந்து கொண்டவர்கள் மட்டும்தான், பொருட்பாலுக்குள் நுழைந்து, ' அறிவுடையார் எல்லாம் உடையார் ' என்று பெருமிதம் கொள்ள முடியும்.

பொருட்பாலில் வள்ளுவர் அறிவை வைத்திருந்தாலும், அவர் காட்டுவது, பொருள் சேர்க்கும் அறிவன்று, அறன் வழிப்பட்ட அறிவே ஆகும்.

இலண்டன் மாநகரில்

# Galaxy News

உங்களுக்குத் தேவையான விரும்பிய
நூல்களை ஓடருக்கு
உங்கள் வீட்டுக்கு அருகாமையில்
உள்ள தமிழ்க் கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்


தொடர்புகளுக்கு
**Mr. K. Alagan**

## Galaxy News

84, Brooks Croft Road
London E17 4JR

Tel : 07958 360 176
Fax : 020 8527 2324





# Meera Gold Smith

*Gems & Jewellery*

896 Garratt Lane, Tooting, London SW17 ONB
Tel : 020 8767 2616 Mob : 07958 948 685
www.meera_jewellery.com

பழைய தங்கத்தில்
புத்தம் புதிய நகைகள் செய்து கொள்ள, அதிர்ஷ்ட
நவரத்தின கற்களை நியாய விலையில்
பெற்றுக்கொள்ள, உங்களுக்குத் தேவையான 22ct
சிங்கப்பூர் நகைகளை நியாய விலையில்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**MEERA GOLD SMITH**

தங்கம் வாங்கும்பொழுது தங்கம்
தெரிந்தவர்களிடம் வாங்குங்கள்

**MEERA GOLD SMITH**

பிரமாண்ட காட்சியறை இல்லை ஆனால்
பிரமிக்க வைக்கும் கலைவண்ணம் வடிக்கும்
நகைச்சிற்பிகளின் கலைக்கூடம்




## 2005ம் ஆண்டிற்கான பிரித்தானியத் தமிழர் தகவல் ஏடு முரசம்

வழமைபோல் தேசிய நினைவெழுச்சி நாளன்று வெளியிடப் படவுள்ளது. தனித்துவம் வாய்ந்த

**அகரவரிசைத் தொகுப்பு, அகரவரிசைப் பொருளடக்கம் ஆகியவற்றுடன் சிறப்பாக வடிவமைக்கப்படும் தகவல் பக்கம், சிறப்பு வர்ணப்படங்கள்** கொண்ட தமிழ் வர்த்தக சமூக சேவை நிறுவனங்களின் விபரங்கள், விளம்பரங்களுடன் மேலும் பல பயன்தரு தகவல்களுடன் வெளிவரும் முரசம் 2005க்கான தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. உங்கள் விபரங்கள், விளம்பரங்கள் இடம்பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

**முன்பக்க அட்டை, விளிம்பு, உள்பக்க அட்டை விளம்பரங்களுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்**

தொடர்புகளுக்கு : தொலைபேசி **020 8665 2751**

email : info@murasam.com
web : murasam.com

THE FINE SRI LANKAN & INDIAN RESTAURANT

" அறுசுவை பதார்த்தங்கள் அனைத்தையும் உயர்தரமாய் வழங்கிடும் ஓர் உணவகம் "

**406 - 408 Lewisham High Road**
**Lewisham**
**London SE 13 6LJ**
**Tel : 020 8690 3392 - 6902617**

## EELAM SHOP

**399 Lewisham High Street**
**Lewisham**
**London SE13 6NZ**
**Tel : 020 8690 6545**

*Taste of Eelam*



# HOTEL WESTEERN

**Hotel Westeern (Pvt) Ltd**

35, Frankfurt Place, Bambalapitiya, Colombo 4, Sri Lanka
Tel : 0094 1 507161, 0094 1 507162, 0094 1 507163, 0094 74 518485
Fax : 0094 74 518481

*Ready to accommodate you ......*
*...at the Sun kissed Beach of Srilanka*
*30 Guest Rooms, 5 Luxurious Suites*
*Restaurant & Party Hall*
*Conference Hall*



**HOTEL WESTEERN**

Situated at the Heart of
Colombo City

E-mail : infor@hotelwesteern.com    Web : www.hotelwesteern.com

Approved by the    Ceylon Tourist.com

# மாபெரும் பட்டுச் சேலைப் பரிசுத் திட்டம்



வழங்குபவர்கள்

## லட்சுமி ஜுவலர்ஸ்

**276 High Street North**
**EASTHAM E12 6SA**
**Tel : 020 8470 5600    Fax : 020 8470 3448**

இப்படத்தில் இரண்டு சேலைகள்
பிரசுரிக்கப்பட்டுள்ளன
கேள்வி 1: சேலைகளில் அசல் எது நகல் எது
கேள்வி 2 : இரண்டு சேலைகளின் இந்திய
விலையைச் சரியாகக் குறிப்பிடவேண்டும்.
சரியாகக் குறிப்பிடும் அதிர்ஷ்டசாலிகளுக்கு
£ 100 பவுண் பெறுமதியான கோலம்
சேலை பரிசாக வழங்கப்படுறது.
எமது நிறுவனத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் பதிலை
அனுப்ப வேண்டிய முகவரி

**தமிழர் தகவல்**



# புரட்டாசியில் சிறக்கும் நவராத்திரி வழிபாடு

## நிஷானி ஜெயபாலன்

சைவமும் தமிழும் சிவனும் சக்தியும் போன்றவை. சக்தியின்றி அணுவும் அசையாது. பெண் தெய்வங்களின் வழிபாட்டுக்குரிய மாதம் புரட்டாசியாகும். அறியாமையை வென்று, அறிவை மத்தியில் பரப்புவதற்கும், தீமையை அழித்து நல்லது செய்வதற்கும் தேவிகளின் பூசை வழிபாடு சிறந்தது. அறத்துக்கு மாறான, அக்கிரமமான செயல்களைச் செய்து, மக்களை வதைத்து வந்தவன் மகிடாசுரன். அப்பேர்ப்பட்ட தீயவனைக் கலைமகள், திருமகள், துர்க்கையான தேவிகள் அவனோடு போர் புரிந்து, மகிடா சூரனைக் கொன்று மக்களைக் காப்பாற்றியதாகப் புராண வரலாறு கூறுகின்றது. இப்பேர்ப்பட்ட தேவிகளை வணங்கி, நன்றி தெரிவிக்கு முகமாகவும், அவர்களின் அருள் பெறவும், புரட்டாசித் திங்களில் நவராத்திரி விழாவைக் கொண்டாடுவார்கள்.

நவராத்திரி விழாவைக் கலைத் திருநாள் என்றும் அழைப்பர். நவராத்திரி ஒன்பது நாட்களையும் பத்தாம் நாளை விஜயதசமி நாளாகவும் கொண்டாடுவார்கள். நவராத்திரி ஆரம்ப மூன்று நாட்கள் துர்க்கை அம்மாளுக்குரியது. அடுத்த மூன்று நாட்கள் திருமகளுக்கும் (லட்சுமி) இறுதி மூன்று நாட்கள் கலைமகளுக்கும் (சரஸ்வதி) வழிபாடுகள் நிகழ்த்தப்படும். துர்க்கா தேவியை வழிபடுபவர்களுக்கு தைரியத்தையும், வீரத்தையும், துணையையும் கொடுப்பாள். திருமகளை வழிபடுபவர்களுக்கு ஐஸ்வர்யத்தையும், பொருளாதாரத்தையும் கொடுப்பாள். சரஸ்வதியை வழி படுவோர்களுக்கு ஞான விருத்தியையும், அறிவையும், கலைவிருத்திப் பெருகவும் அருள்பாலிப்பாள். நவராத்திரி விழாவில் சிறந்தது சரஸ்வதி விழாவாகும். சரஸ்வதி விழா, அழகான கொலு பொம்மைகளால், வீடுகளில் வரிசை வரிசையாக வைத்து அலங்கரிப்பார்கள். இதை அம்மன் கொலு என அழைப்பர். பொம்மை கொலு என்றும் சிலர் அழைப்பர். நாள்தோறும் சிறு குழந்தைகட்கு கிருஷ்ணர், ஆண்டாள், ராதை போன்ற பல்வேறு வேடம் போட்டு அலங்காரம் செய்து, வருபவர்களுக்கு குங்குமம் கொடுத்து வரவேற்பர். வரவேற்கும் காட்சி இனிமை தரும். துர்க்கா தேவி, லட்சுமி தேவி, சரஸ்வதி தேவி படங்களுக்கு மாலை அணிவித்துப் பிரசாதம், சந்தனம், குங்குமம் வைத்து, விளக்கு ஏற்றி, எல்லோரும் சேர்ந்து தேவாரம் பாடி வணங்குவார்கள். சரஸ்வதி பூசையை வெகு விமரிசையாகப் பாடசாலை மாணவர்களும் கலைப் பிரியர்களும் கொண்டாடுவார்கள். சரஸ்வதி பூசையை யாதொரு பலனையும் விரும்பாதவர்களும் பிற மதத்தினரும், கல்வி விருத்திக்காகவும், அறிவு பெறுவதற்காகவும் விரும்புவர். சரஸ்வதி தேவிக்கு மிகவும் விருப்பமானது நவராத்திரி விழாவே.

சரஸ்வதியானவள் எல்லா உயிர்களிடத்தும் அன்பும், கருணையும் உடையவள். இதை மக்களுக்கு உணர்த்தவே நவராத்திரி விழாவைக் கொண்டாடுவார்கள். நவராத்திரி வழிபாடு கொடுமைகளை ஒழித்து நன்மைகள் பெறக் கொண்டாடப்படும் பண்டிகையாகும். பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவர். விஜயதசமி, இது பலவித வெற்றிகளைத் தரக் கூடிய நாளாகக் கருதப்படுகிறது. விஜயதசமியில் சிறு பிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவார்கள். இந்த நாளில் எல்லாவிதமான பெண் தெய்வங்களின் அம்சங்கள் அனைத்தையும் ஒன்று கூட்டி ஒரு சமனாகக் காட்சி அளிக்கும் நாளாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி (2)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | 2 ப | | 3 |
| 4 | சி | 5 | | |
| 6 | | | 7 | ம் |
| ய | 8 | | | 9 |
| | | | டி | 10 |

**இடமிருந்து வலம்**

1. நம் செப்டம்பர் இதழின் அட்டைப்படத்தில் மெழுகுவத்தியாய் ஒளிதருபவன் இவனே (4)
4. இவன் இல்லையென்றால், கலை, இலக்கியங்கள் எடுபடாது (4)
5. திருமணம் ஆகாத பெண் (3)
6. அமெரிக்காவை எதிர்த்து நின்ற வீரஞ் செறிந்த நாடு (5)
8. இது வந்தால் பத்தும் பறந்து போகும் (2)

**வலமிருந்து இடம்**

9. அரசியலுக்கு இது வேண்டும் (3)
10. ஆண்களின் முகத்தில் வளரும் (2)

**மேலிருந்து கீழ்**

1. திரைகடலோடியும் இதைத் தேட வேண்டும் (5)
2. இந்திய விடுதலைக்குப் போராடித் தூக்கு மேடை ஏறிய மாவீரன் (5)
3. பழம் (2)
7. சேரன் செங்குட்டுவன், இமயத்தில் வெற்றிக்கொடி...........னான் (3)
8. களத்தில் எதிரியைச் சந்திக்க இது தேவை (2)

**கீழிருந்து மேல்**

10. தண்ணீர் மட்டுமின்றித் தாய்நாடும் நமது...................(3)

முதலில் வந்து சேரும் சரியான விடைக்கு 25 பவுண் பரிசாக அனுப்பி வைக்கப்படும்
உங்கள் விடைகளைத் **தமிழர் தகவல்** முகவரிக்கு அனுப்பி வைக்கவும்


கோலாகலத் தி
October 22,
at 10.30
JK
JK GOLD H
&
FASHION HO
314 - 316 London Road Croyd
Tel : 020 8684 4577 Fax
வாழ்த்துகி
BEST FOOD SUPE
259 - 261, London Road
West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577
249 Northolt Road
Harrow Middlesex HA2 8
Tel : 020 8423 9933

திறப்பு விழா

*2, Friday*

*0 am*

HOUSE

IOUSE LTD

roydon, Surrey CRO 2TJ

Fax 022 8684 4677

கிறோம்

UPERMARKET

olt Road
sex HA2 8HR
423 9933

364 - 366, Bath Road
Hounslow Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323



## West Croydon-வில்

### BEST FOOD SUPER MARKET



அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
Tel : 020 8684 6269
Fax : 020 8686 4577

## Harrow-வில்

### BEST FOOD SUPER MARKET



அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்

249 Northolt Road
Harrow
Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

சுகி சிவம் அவர்களின் அனைத்துப் புத்தகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.



திருமணமா
பூப்புனித நீராட்டுவிழாவா
பிறந்த தினமா
நீங்கள்
அழைக்க வேண்டியவர்கள்

## A1 PARTY SERVICES

**லிங்கம் பலூன்ஸ்**

மணவறை – பலூன் அலங்காரம்
ஒடியோ, வீடியோ உடன் அழையுங்கள்
தொடர்பு : 07958652647
020 8710 9648

## Hounslow-வில்

### BEST FOOD SUPER MARKET




அரிசிமா, மிளகாய்த் தூள், நல்லெண்ணெய், அவல், ஊறுகாய், வடகம், மரக்கறி வகைகள், பழவகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல உடனுக்குடன் இறக்குமதி செய்கிறோம்

364 - 366, Bath Road
Hounslow
Middlesex TW4 7KT
Tel : 020 8577 6002
Fax : 020 8570 2323

# தமிழர்களுக்குத் தத்துவம் இல்லையா ?

## முனைவர் முத்து மோகனுடன் ஓர் நேர்காணல்

(முனைவர் முத்து மோகன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்)

● மதம் சாராத சிந்தனை மரபுகளை தத்துவங்களைத் தரிசனங்கள் என்று வகைப்படுத்துகிறார்கள். இந்த வகைப்பாடு பற்றிக் கூறுங்கள்.

❑ தரிசனங்கள் என்பது பொதுவாக அறுவகைத் தரிசனங்கள் என்று கூறுவார்கள். வேதாந்தம், மீமாம்சம், நியாயம், வைசேடிகம், யோகம், சாங்கியம் ஆகியவை இவற்றுள் அடங்கும். இதற்கு வெளியே சார்வாகம், பௌத்தம், சமணம் எல்லாம் வந்துவிடும். இது பண்டைய இந்தியாவின் நிலை. அதற்குப் பிறகு இடைக்காலத்தில் வெவ்வேறு அணிகளாக இவை பரிணமிக்கின்றன. தரிசனங்கள் என்பதைத் தத்துவங்கள் என்று சொல்லக்கூடிய பள்ளிகளுக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த ஆறு பள்ளிகளுக்கு பயன்படுத்தியிருக்கின்ற மரபு இங்கு இருந்திருக்கின்றது. இந்த ஆறு பள்ளிகளும் நேரடியாகச் சமயங்கள் என்று சொல்ல முடியாததாக இருந்திருக்கின்றன. அதில் இருக்கின்ற வேதாந்தத்தைத் தவிர, ஓரளவுக்கு மீமாம்சத்தைத் தவிர நியாயம், வைசேடிகமும் சாங்கிய, யோகமும் மதம் என்றோ சமயம் என்றோ சொல்ல முடியாது. அவை அந்த எல்லா எல்லைகளுக்கு வெளியே உள்ளவைதான். சிந்தனை மரபுகளாகவே (தத்துவப் பள்ளிகாளகவே) இருந்திருக்கின்றன.

கிறித்தவ மதம் எல்லா கிரேக்கத் தத்துவங்களையும் எடுத்துக் கொள்ள வில்லை. பிளாட்டோவினுடைய தத்துவங்களை அதிகமாகவும் அரிஸ்டாட்டிலின் தத்துவங்களின் ஒரு பகுதியினையும் எடுத்துக் கொண்டது. கிறித்துவ மதத்தினுடைய வரலாற்றில் பிளாட்டோ பள்ளியில் உள்ளவர்களும் அரிஸ்டாட்டில் பள்ளியில் உள்ளவர்களும். சண்டையிட்டுக் கொண்டே இருந்திருக்கிறார்கள். இது ஒரு நீண்ட நெடிய விவாதமாக நடந்து கொண்டிருக்கிறது. எந்தத் தத்துவங்கள் இவர்களுடைய இறைக் கொள்கையை ஒரு உச்சிக்கு அல்லது மறு உலகுக்குக் கொண்டு செல்வதற்கு வசதியாக இருந்தனவோ அந்தத் தத்துவங்கள் பிரபலமடைந்தன. இன்று பிளட்டோவும், அரிஸ்டாட்டிலும் பிரபலமடைந்திருப்பதற்கு கிறித்தவ இறையியல் ஒரு காரணம். அதே போல சங்கரர், இராமானுசர் தத்துவங்கள் பிரபலமடைவதற்கும் அவற்றிற்குப் பின்னால் சமயங்கள் இருந்தன என்பதுதான். அதனால் அந்தச் சமயங்களில் இருக்கக் கூடிய அறிவாளிகள் மீண்டும் மீண்டும் அந்தத் தத்துவங்களை வைத்தும் தத்துவங்களில் உள்ள நுட்பங்களை வைத்தும் இந்தச் சமயக் கொள்கைகளைப் பலப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். சமயச் சிந்தனையாளர்கள் நடத்திய சமய விவாதங்களில் அந்தத் தத்துவங்களை அதிகமாக பிரபலப்படுத்தினார்கள்.

சாங்கியமும், வைசேடிகமும் அந்த அளவுக்குப் பிரபலமாகவில்லை. ஏனென்றால் சமயங்களால் அவை எடுத்துக் கொள்ளப் படவில்லை. சமயங்களுக்குச் சார்பான கருத்துகள் அவற்றில் இல்லை.

● தமிழர்ககுக்கு தத்துவம் இல்லை. சங்க இலக்கியங்களில் சமயம் இல்லை என்பது குறித்து ...

❑ தவறு. தத்துவம் இல்லாமல் ஒரு வாழ்க்கை முறை அமையாது. தத்துவம் என்பது வாழ்க்கை முறை குறித்த ஒரு திட்டம் மாற்று வாழ்க்கை முறை குறித்த தேடல் என்று கூட சாதாரண தளத்தில் கூடப் பெயர் வைக்கலாம். ஆனால் தமிழர்களிடத்தில் ஒரு தன்னுணர்வோடு, ஒரு குறிப்பிட்ட வடிவத்தில், நூல்கள் வடிவத்தில், சிந்தனைகள் வடிவத்தில் வரையறுக்கப் படவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் சங்க இலக்கியங்களின் ஊடாக நாம் ஒரு தொடர்ச்சியாக முயற்சி செய்தால் தமிழர்களின் தத்துவக் கருத்துகளை வரையறுக்கலாம். திரு.வ.சுப.மாணிக்கம் அவர்கள் தமிழர்களுடைய அடிப்படை நெறி அக உணர்வுதான் என்று இலக்கியங்கள் வழியாகச் சொல்கிறார். இக்கருத்து சாதாரணமானதல்ல. மனித இனத்தின் தோற்றுவாய்களில் ஒன்று இனப்பெருக்கம் செய்வது. அந்த இனப்பெருக்கம் செய்வதற்காக ஆண், பெண் என்ற இரண்டு கூட்டங்களுக்கு இடையிலான உறவுகளைக் குறிப்பிட்ட ஒரு வரையறை செய்து கொள்கிறோம். ஆகவே அசு உணர்ச்சி என்னும் காதல் உணர்ச்சி என்பது தமிழர்களின் அடிப்படைப் பண்பு என்று கூறினால் அதிலிருந்து பல இடங்களுக்கு நாம் செல்ல முடியும். இப்படி ஒரு முறைப்படுத்திக் கொள்கையாக்கிச் சொல்லித் தத்துவப்படுத்த முடியும்.

இந்தக் கொள்கைகளுக்கு மேலே அதை முறையாக வளர்த்தோமா என்பதுதான் சிக்கல். இதனால் தமிழர்களுக்குத் தத்துவமே இல்லை என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இனக் குழுவாக வாழக் கூடிய கூட்டத்துக்கும் அவர்களுடைய புராணங்கள் மூலமாகத் தத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியும். அவை எந்த மொழியில் சொல்லப்பட்டிருக்கின்றன., நவீன மொழியில் அதை உட்கொள்ள முடிகிறதா ? என்பதைப் பார்க்க வேண்டும். லெவி ஸ்ட்ராஸ் என்னும் அறிஞர் லத்தீன் அமெரிக்க மக்களுடைய வாழ்க்கை முறைகள், திருமண முறைகள், சடங்குகள், தொன்மங்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து அவர்களுடைய சிந்தனை முறை என்பது நவீனச் சிந்தனை முறை (விஞ்ஞான ரீதியிலான சிந்தனை முறை) என்பதோடு ஒப்பிடத்தக்கது என்று கூறுகிறார்.

எனவே அவர்கள் எந்த மொழியில் பேசியிருக்கிறார்கள், அந்த மொழியை நம்மால் வாசிக்க முடிகிறதா ? அவர்களுடைய திட்டமிடப்பட்ட வாழ்க்கைத் திட்டம் புலப்படுகிறதா ? என்பதுதான் இதன் முதன்மை. தமிழில் நீண்ட நெடிய பாரம்பரியம் இருக்கின்றபொழுது இங்கு தாராளமாகத் தத்துவங்கள் முகிழ்த்திருக்க முடியும். தத்துவங்கள் என்றால் காலத்தைக் கடந்த, உலகத்தைக் கடந்த ஒன்று என்ற மனோபாவம் உடையவர்களாக இருக்கின்றோம். அவர்களிடம் அது இல்லாமல் இருந்திருக்கலாம். திருக்குறளில் வீடு என்பது எழுதப்படவில்லை. இல்லை வீட்டையும் சேர்த்து உள்ளே எழுதியிருக்கிறார். என்ற இந்த இரண்டு கூற்றுகளை உடையவர்களுமே வீடு என்ற ஒன்று இருக்கவேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறார்கள். எனவே இந்த கூற்றுகளைக் கூறி திருப்திப்பட்டுக் கொள்கிறார்கள். விதிமுறைகளை வைத்துக் கொண்டு இதை அணுகுகிறார்கள். வீடுபேறு என்பதை ஏன் சொல்ல வேண்டும்? அது இல்லாமலும் தத்துவம் இருக்கலாம் அல்லவா ? இது கேள்வி.

நேர்க்காட்சிவாதம் (Positivism)என்ற ஒன்று உண்டு. இது மேலே சொன்னவற்றை இவை விஞ்ஞானத்தினுடைய, தத்துவத்தினுடைய சிக்கல்கள் அல்ல என்கிறது. எனவே விதிமுறைகளைத் தூக்கி எறிந்து விட்டு நேர்முகமாக வாழ்க்கையை மதிப்பிட்டால் நேர்முகமான அறிவியலை உண்டாக்க முடியும். நேர்முகமான அறிவை எவ்வாறு உற்பத்தி செய்யமுடியும் ? என்ற பார்வையை அது உருவாக்கும். ஒரு அர்த்தத்தில் தமிழில் ... திருக்குறளில் ... சார்வாகத்தில் ... சமண, பௌத்தத்தில் ... இந்த நேர்க்காட்சிவாதத்தின் அடிப்படைகள் இருக்கின்றன என்று சொல்லலாம்.

இறைவனோடு தொடர்பு படுத்தித் தான் அறிவியலை எழுத முடியும் என்பது இல்லாமல் இவை இறைவனைச் சாராத தமது அறிவியலை வகுத்திருக்கின்றன. சார்வாகத்தின் விளக்கங்கள், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மூன்றும் சேரும்போது இவை எதுவும் இல்லாத புதுப்பண்பு உருவாவது போல உயிர் என்னும் பண்பு உடலில் உள்ள சேர்க்கைகளினால் உருவாகிறது என்கின்றன. இது நேர்க்காட்சிவாதக் கருத்தாக்கம். இது உயிர் பற்றிய குறைந்த விளக்கமாக இருந்தால்கூட நிறையப் பாராட்டப்பட வேண்டிய கருத்து இது

(நன்றி : ஒப்புறவு)

*சிவமயம்*
*துன்னையூர் சாரதாபீடம் ஜோதிட நிலையம்*
*சொல்விற்பனமும் அவதானமும் – கவி சொல்லவல்ல*
*நல்வித்தையும் தந்து அருள்புரிவாய்*

# இலண்டன் திருக்கணித பஞ்சாங்க கணிதருக்கு ஒரு பகிரங்கக் கடிதம்.

மதிப்பிற்குரிய திருக்கணித பஞ்சாங்க கணிதருக்குப் பணிவான வணக்கம் !

நீண்ட நாட்களாகவே உங்களுக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும் என்கின்ற நிலையில் நான் இருந்தேன். காரணம் 5.30 மணி நேர வித்தியாசம் கொண்ட இலங்கை – இலண்டன், 4.30 மணிநேர வித்தியாசம் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், 2.30 மணி நேர வித்தியாசம் கொண்ட மலேசியா – இலங்கை போன்ற நாடுகளுக்கெல்லாம் நீங்கள் தனித்தனிப் பஞ்சாங்கம் கணித்து வெளியிடுகின்றீர்கள். இந்தக் கணிப்புகள், பஞ்சாங்க மரபிற்கும், ஜோதிட சாஸ்திர விதிக்கும் சரியாக அமைகின்றதா ? என்பது என் கேள்வி. இதைப்பற்றிப் பிரிதொரு முறை நல்ல ஆறுதலாக நாம் ஆராய்வோம். இப்பொழுது விடயத்திற்கு வருகின்றேன். இலங்கை, இந்தியாவில் கணிக்கப்படுகின்ற, வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு உலகில் எந்த நாட்டில் வேண்டுமென்றாலும் ஜாதகக் கணிப்பு, சுப முகூர்த்தங்கள் கணித்து விடலாம் என்பது ஜோதிடம் கற்ற அனைவரும் அறிந்த விடயம். அது ஒருபுறம் இருக்க தாங்கள் தங்களின் பஞ்சாங்க முகவுரையில், இங்கிலாந்தில் உள்ளோர் இலங்கை, இந்திய நேரங்களுக்குக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களை நேரடியாகப் பாவித்து விரதங்கள், சுப முகூர்த்தங்கள் என்பவற்றை பிழையாகக் கைக்கொள்ளாது இப்பஞ்சாங்கத்தின்படி சரியாக அனுஷ்டித்து நன்பயன் பெறுவார்களாக ! என்று குறிப்பிட்டு இருப்பது கவனிக்கத்தக்கது. அப்படிக் கூறிவிட்டுத் தாங்களே தங்களின் கணிப்பில் குழப்பங்களைக் கொடுத்திருப்பது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. 2004 ஆம் ஆண்டு இலண்டன் திருக்கணித பஞ்சாங்க கணிப்பில் இதுவரை காலமும் நாம் அறியாத ஒரு விடயம் புதிதாகக் கணித்து இருக்கின்றீர்கள். அதாவது, கேதார கௌரி விரத பூர்த்தியன்றே கந்தர் சஷ்டி விரத ஆரம்பம் என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். இது எந்த ஜோதிட விதியில் கணித்தீர்கள் என்பது பற்றி சரியான விளக்கம் வேண்டி நிற்கின்றேன். அன்றைய தினம் அமாவாசை திதி இலண்டன் நேரத்திற்கு பிற்பகல் 2 மணி 27 நிமிடம் நிறைவு பெற்று சூரிய அஸ்தமனத்திற்கு முன்பே பிரதமை திதி தொடங்கிவிடுகின்றது என்கின்ற திதி நிர்ணய விதியை நீங்கள் முன்வைத்தால் அதே உங்களின் சுவிற்சிலாந்து நாட்டிற்கென கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தில் கௌரி விரத தினத்திற்கு மறுநாள் கந்தர் சஷ்டிவிரத ஆரம்பம் என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். இதற்குத் தங்களின் பதில் என்ன ? ஐரோப்பிய ஒன்றியங்களுக்கு கணிக்கப் பெற்ற கௌசிகர் வாக்கியக் கணிப்பு, தங்களின் திருக்கணிதக் கணிப்பு, ஒரே நாளில் கந்த சஷ்டி விரத ஆரம்பம் எனக் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். ஆனால் அதே இலண்டன் கணிப்பில் கௌசிகர் வாக்கியக் கணிப்பு சரியாகக் கணித்திருக்கத் தாங்கள் தங்கள் கணிப்பில் மட்டும் முதல் நாள் கந்த சஷ்டி விரத ஆரம்பம் என கணித்திருப்பது ஏன் ? இதற்குத் தங்களின் பதில் என்ன ? சூரிய அஸ்தமனத்திற்கு முன் விரதத்திற்கு உரிய திதி வந்தால் அன்றைய தினம் விரதம் கொள்ளலாம் என்றால் இலங்கைக்கு என நீங்கள் கணித்த திருக்கணித பஞ்சாங்கங்களின் இப்படியான நிலைகள் வரும்போது ஏன் அன்றைய தினமே விரத நிர்ணயம் கணிக்காமல் மறுநாள் கணித்திருக்கின்றீர்கள் ? உதாரணமாக 1961 ஆம் ஆண்டு பிலவ வருஷம் – ஐப்பசி 23 ஆம் நாள் புதன் கிழமை 08–11–1961ல் அன்று உங்களின் இலங்கை திருக்கணித பஞ்சாங்கப்படி கோதார கௌரி விரத தினத்தன்று அமாவாசை திதி மாலை 3 மணி 29 நிமிடத்தோடு நிறைவு பெற்று பிரதமை திதித் தொடங்கிவிடுகிறது. ஆனால் மறுநாள்தான் கந்த சஷ்டி விரத ஆரம்பம் என்று கணித்திருக்கிறீர்கள். அப்படியாயின் இந்தக் கணிப்புகளுக்குரிய நிர்ணயம் எங்கு எப்படிக் கற்றுக் கணிக்கின்றீர்கள் ? ஒரு சமூகத்தின் சமய விழுமியத்தின் கண்கள் போல் விளங்குவது பஞ்சாங்கம். அதைக் கணிக்கும் தாங்கள் எவ்வளவு காரியப் பொறுப்பைக் கொண்டுள்ளீர்கள் என்பதைச் சற்றுச் சிந்தியுங்கள். நீங்கள் கணித்து விட்டுக் கொழும்பில் இருக்கின்றீர்கள். வெளியீடு செய்பவர்கள் வெளியிட்டுவிட்டு தமது பொறுப்பு முடிந்தது என நினைத்துச் சென்று விடுவார்கள். சவாச்சாரியர்களிடம்தான் மக்கள் கேள்வி கேட்பார்கள். இலங்கை, இந்தியாவிலே வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கங்கட்கு விரத நிர்ணய விடயங்களில் நாட்கணக்கு வித்தியாசம் வந்ததே கிடையாது. ஆக கிரக மாற்றங்களில் மட்டும்தான் இரு பஞ்சாங்கங்களும் வித்தியாசப்படுவதுண்டு. ஆனால் அங்கு பெரும்பாலும் ஆலயங்களில் வாக்கிய பஞ்சாங்கமே பாவனையில் இருப்பதால் பிரச்சனைகள் எழுவது இல்லை. உங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தையோ அல்லது வாக்கிய பஞ்சாங்கத்தையோ தவறு என்று யாரும் இதுவரை ஆதாரப்பூர்வமாகக் கூறவில்லை. வாக்கிய பஞ்சாங்கம், சமய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம், விஞ்ஞானப் பஞ்சாங்கம் என்றே கூறிவருகின்றனர். தவறு நிகழ்வது மனி இயற்கை. இப்படியான தவறுகள் நேர்ந்தால் அதைப் பத்திரிகை, மற்றும் பிரசுரங்கள் மூலம் தெரியப்படுத்தினால் மக்கள் குழப்பம் அடையமாட்டார்கள் என்பது அனைவருக்கும் ஏற்புடைய கருத்து. வெளிநாடுகளுக்கு என்று நீங்கள் கணிக்கின்ற திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி, விரத நிர்ணய திதிகள் பஞ்சாங்க மரபின் ஜோதிட திதி நிர்ணய விதியின் படி அமைவது பெரும்பாலும் குறைவே. அப்படி ஆராய்ந்து பார்க்கின்றபோது ஊரில் செய்கின்ற நாளிலேயே இங்கும் செய்யலாம் என்பதில் தவறு இல்லை. இது ஜோதிடம் அறிந்த ஆன்றோர்கள் புரிந்து கொள்வார்கள். இந்த நாட்டிற்கு என்று கணிப்புகள் வருமுன் மக்கள், ஆலயங்கள் இதையே செய்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இந்தக் குழப்பங்களுக்குத் தாங்கள்தான் ஒரு சரியான தீர்வு தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டு இந்தப் பகிரங்கக் கடிதம் மூலம் இதற்கு ஒரு நல்ல தீர்வு வரவேண்டும் என நினைக்கின்றேன். இது ஒரு சமயத்தின் பொது விடயம் என்பதால் உங்கள் தவறைச் சுட்டிக் காட்டினேன். இதை தவறாக எடுக்காது சமூக சிந்தனையோடு எடுத்துச் செயல்படுங்கள்.

நன்றி !

இவ்வண்ணம்
துன்னையூர் – ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்
( சாரதாபீடம் ஜோதிட நிலையம் )

## உணரப்படாத சில உண்மைகள் !

புலம் பெயர்ந்து பிரிட்டனில் வாழும் மக்களின் வாழ்வு நிலைகளை அறிந்திருக்கிறேன். அவர்களில் பலர் வசதியான வாழ்வு வாழ்கிறார்கள் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் புத்தி ஜீவிகள் என்பதையும் உழைப்பாளிகள் என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் அவர்களை அறியாமலேயே அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்கின்ற கசப்பான உண்மையையும் இங்கு தெரியப்படுத்த விரும்புகிறேன்.

1. இலண்டனில் சந்தைப்படுத்தப்படும் பொருட்களின் தரம் பற்றி யாரும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.
2. சாப்பாட்டுச் சாமான்கள் தரம் பற்றி குறை சொல்ல விரும்பாவிட்டாலும் அவற்றின் விலைகள் மற்ற ஐரோப்பிய - கனடா நாடுகளை விடக் கூடுதலாக இருப்பதை ஏன் கண்டு கொள்ளவில்லை.
3. இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் தயாரிப்புகள் இங்கு நான்கு மடங்கு கூட்டி விற்கப்படுகின்றனவே, ஏன் ?
4. அப்படிக் கூட்டி விற்பதால்தான் இரண்டிற்கு ஒன்று இலவசம் என்று ஏமாற்றப்படும் சாதுர்யம் நடக்கிறது என்பதை ஏன் தெரிந்து கொள்ள வில்லை.
5. இந்தியாவில் மிகவும் மலிவான பொருட்களே இலண்டனில் பெருமதிப்பு உடையதாக உள்ளன, ஏன் ?
6. இங்குள்ள துணிக்கடைகளில் உள்ள புடவைகள் அங்குள்ள பெறுமதியை விட நான்கு மடங்கு விலைக் குறியீடுகளுடன் உள்ளன. இதை எத்தனை பேர் உணர்ந்துள்ளார்கள்.

ஒவ்வொரு பொருளாகப் பட்டியலிட நாம் விரும்பவில்லை. உண்மையை உணர்ந்து கொண்டு நடவுங்கள் என்றுதான் கூறுகிறோம். வியாபாரிகளே ஏமாற்றாமல் உங்கள் வணிகத்தை விஸ்தரிக்க முடியாதா என்றுதான் கேட்க வேண்டியுள்ளது. அரசியலில் ஏமாற்றப்பட்ட தமிழன் புகலிடங்களிலும் தம் சொந்தங்களாலேயே ஏமாற்றப்படக்கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறேன். முடிவு உங்களுடையதே!

லண்டன் Tower Bridge Castle -ல்
இருக்கும் காகம்
லண்டன் முழுவதும் காகம் இருக்கிறது



## தீபம் முந்துகிறது

சன் தொலைக்காட்சி, அடிக்கடி ஒரு விளம்பரம் செய்கிறது. ஏதேனும் ஒரு திரைப்படத்தைத் திரையிடுவதற்கு முன் உலகத் தொலைக்காட்சிகளில் முதன்முறையாக என்று அறிவிக்கின்றது. அண்மையில் பத்ரி படத்துக்குக் கூட, அப்படித்தான் அறிவிப்பு வந்தது.

ஆனால், ஐரோப்பாவில் ஒரு விநோதம் நடைபெறுகின்றது. சன் தொலைக்காட்சி அறிவிக்கும் திரைப்படத்தை, அது திரையிடுவதற்கு முதல்நாளே, தீபம் தொலைக்காட்சி திரையிட்டுப் பார்வையாளர்களை அசத்துகிறது. இந்நிகழ்வு ஒவ்வொரு முறையும் நடைபெறுகின்றது.

எனவே முதன்முறையாக என்னும் அறிவிப்பை சன் தொலைக்காட்சி வெளியிட்டாலும், உண்மையிலேயே முதன்முறையாகப் படத்தைத் திரையிடும் பெருமை தீபத்திற்கே போய்ச் சேர்ந்து விடுகிறது. இது எப்படி?

## விஷம் !

வின்ஸ்டன் சேர்ச்சிலைப் பார்த்து ஓர் அழகி நான் உங்கள் மனைவியாக இருந்தால் உங்களுக்கு விஷம் கொடுத்துவிடுவேன் ! என்றார். அதற்கு சேர்ச்சில், "நீங்கள் எனக்கு மனைவியாக வாய்த்தால், நான் அதைச் சந்தோஷமாகக் குடித்துவிடுவேன்" என்றார்.

## பிரசவன வாசஸ்பதி

சுகி. சிவம் அவர்களுக்கு சமீபத்தில் கொடுக்கப்பட்ட அதி உயர் பட்டம்


## 'புதினம்' வாசியுங்கள் !

இலண்டனில் தொடர்ந்து நீண்ட நாட்கள் வெளிவந்து கொண்டிருக்கும் உயிர்நாடியான பத்திரிகை. மாதம் இருமுறை

சகோதர சஞ்சிகை : மனம் பேசுது
மாதமொருமுறை
ஆசிரியர் : ஈ.கே. இராஜகோபால் அவர்கள்

Competitive Rates to All Countries A-Z

TM

Fantastic rates - call Sri Lanka from 10p

සිගිරි
சிகிரி
SIGIRI

enjoy
home comforts
with a Sigiri*Home* account
from Sri Lanka Telecom

மலிவான விலை – தெளிவான ஒலி – விரைவான இணைப்பு



*best prices - best connections - best quality*

visit www.sigiri.net or call our hotlines on 0800 485 1110 (24 hours) or 020 7094 9494

Sri Lanka Telecom

# கருநாகம்

– வேல் அமுதன்

( ஈழத்தின் தெல்லிப்பழை – குரும்பசிட்டி எனும் அழகான கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு வேல் அமுதன் 1980 – 83 களில் பத்திரிகைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை வியப்புறப் பேசப்பட்ட இலக்கிய நிறுவனமான ' தமிழ்க் கதைஞர் வட்டம் ' என்ற ' தகவம் ' அமைப்பின் தந்தையாவார். சென்னையில் இயங்கிய ' இலக்கியச் சிந்தனை ' எனும் அமைப்புடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டது இவரது ' தகவம் '. இவர் எழுதிய சிறுகதைகளுக்காக இலங்கை சாகித்ய மண்டலப் பரிசையும் பெற்றுக்கொண்டவர். இன்று கொழும்பில் வசிக்கும் திரு வேல் அமுதன் 1978ல் வெளியிட்ட மாரீசம் எனும் சிறுகதைத் தொகுப்பில் இருந்து இச்சிறுகதை எடுக்கப்பட்டது. அவருக்கு எமது நன்றியை சொல்லிக்கொள்கிறோம். )

– ஆசிரியர்

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து ஏழு ஆகஸ்ட் மாதம் பதினேழாம் திகதி ஒரு புதன் கிழமை அதிகாலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புகைவண்டி – ' யாழ்தேவி ' யாழ்ப்பாணம் நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறது.

யாழ்தேவி வழமைபோல் பிரயாணிகளால் நிரம்பி வழிகிறது. நடை பாதையில், ஆசன இடைவெளிகளுள், ஆசனங்களுக்குக் கீழ், கதவுகள் ஓரம் – இப்படி, எங்கும் ஒரே சனத்திரள். பச்சிளம் பாலர்கள், தாய்மார்கள், பெரியோர்கள், நோயாளிகள் – இப்படிப் பலதரப்பட்டோர்.

இவர்களுள் பிரபல்ய டாக்டர் கணேசன் அவர்களும் ஒருவர். பிரயாணிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பொழுதைப் போக்குகின்றனர். கணேசனுக்கு நேரம் கழிவதாக இல்லை. ஒவ்வொரு நிமிடமும் நத்தை வேகத்தில் நகர்ந்து அவருக்கு நரக வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அவரின் உடல் புகைவண்டியினுள்ளும் உணர்வு அவர் பிறந்த ஊரிலிருக்கும் அவரின் தந்தையைச் சுற்றியும் வட்டமிட்டது.

" அப்பா அவஸ்தைப் படுவாரா ? வேதனை தாங்க மாட்டாமல் கத்தி அழுவாரா? – பாவம் ! நான் அங்கிருந்தால், தேவை அறிந்து உதவுவேன். கஷ்டத்தைக் குறைக்க மருந்து கொடுப்பேன் "

" நான் எப்போதோ போயிருக்க வேண்டும். பேய்த்தனமாக விமலாவையும், கயல்விழியையும் மாத்திரம் அனுப்பி யிருந்தேனே ! அவர்கள் போனபோது நானும் போயிருக்க வேண்டும். அப்பாவுக்குக் கடுமை. உடனே வருக எனத் தந்தி வரும்வரை போகாதிருந்து விட்டேனே ! "

" நான் போகுமுன் வருத்தம் மோசமாகி – நடக்காது அப்படி நடக்கவே நடக்காது. அவர் புண்ணியம் செய்த ஆன்மா. ஆண்டவன் கருணை காட்டுவார். செல்வச் சந்நிதியான் கைவிட மாட்டான். அவர் தனது விருப்பத்தை நிறைவேற்றியே கடைசி மூச்சை விடுவார். "

" ... வழிக்கு வழி சொன்னாரே ! தம்பி! எனக்கு நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அந்திய காலம் அண்டையில் நின்றால் போதும். அதை மாத்திரம் செய்துபோடு என்றாரே ! – செய்வேனா? அவர் சாகுமுன் போயிடுவேனா ? "

" போயிடமுடியும்! யாழ்தேவி எப்படியும் மூன்று மணிக்கு முன்பாக யாழ்ப்பாணம் போய்விடும். ரவுனிலை கார் பிடித்தால் அரை மணித் தியாலத்துள் வீட்டிற்குப் போய் விடலாம். "

இப்படி, பலவிதமான சிந்தனைகளில் மூழ்கி, தன்னை மறந்து, சுற்றாடலில் நடப்பதை அறியாது கணேசன் அதிக நேரம் இருந்து விட்டார். பொத்துஹேர புகையிரத நிலையத்தில் புகைவண்டி இருபது நிமிட நேரம் வரை மறிக்கப் பட்டிருந்ததையும் அவர் அவதானிக்கத் தவறிவிட்டார்.

இப்போது புகையிரதப் பெட்டிகளிலிருந்து எழுந்த அலறலும், அழுகையும், ஓலமும், பேரிரைச்சலும் கணேசனைப் பிரத்தியட்ச உலகுக்கு அழைத்து வந்தன. கணேசன் விழித்துக் கொண்டார். தன்னைச் சூழ்ந்துள்ள பேராபத்தை உணர்ந்து கொண்டார்.

அது, இனக் கலவரம் ! சிங்கள – தமிழ்க் கலவரம் !

தமிழர் மிருகத்தனமாகத் தாக்கப் பட்டனர். குழந்தைகள், பாவையர், வயோதியர், நோயாளர் என இரக்கம் காட்டப்படவில்லை. தடி, பொல்லு, போத்தல், கத்தி, கிறிஸ் ஆகிய ஆயுதங்களால் தாக்கினர். கன்னங்கள் பதம் பார்க்கப்பட்டன. கை கால்கள் முறிக்கப்பட்டன. தலைகள் உடைக்கப்பட்டன.

கணேசன் இருந்த பெட்டி யினுள்ளும் சில சிங்கள காடையர் ஏறினர். ' உம்ப தெமளத, சிங்களத ' என விசாரித்து தமிழருக்கு வசைமாரியும், அடி உதையும் கொடுத்தனர். சேட்டுக்களையும், சட்டைகளையும் கிழித்தனர். சால்வைகளைப் பறித்தனர். வேட்டிகளையும் சேலைகளையும் உரித்தனர். பேனாக்கள், மூக்குக் கண்ணாடிகள், கைக்கடிகாரங்கள், மணிப் பேசுகள் முதலியவற்றைப் பறித்தனர். கையணிகள், காதணிகள், கழுத்தணிகள் முதலியவற்றைப் பிடுங்கினர். பொதிகள், சூட்கேசுகள் முதலியவற்றைக் கொள்ளையடித்தனர்.

இரண்டு காடைகள் கணேசனுக்கு முன்னிருந்த ஆசனத்திலிருந்த ஒரு பெரியவரின் கன்னத்தில் ' பளார் ', ' பளார் ' என்று அறைந்தனர். அவரின் மனைவியின் தாலிக்கொடியையும், தோட்டையும் பிடுங்கினர். அத்தாயின் காதுகளிலிருந்து ரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அவள் ஓலமிட்டாள். அவர்களின் இரு குழந்தைகளும் பயந்து அலறின. காடைகள் குழந்தைகளுக்கும் தம் கைவரிசையைக் காட்டினர். இரு குழந்தைகளையும் தூக்கித் தூக்கி ஆசனத்தில் மோதினர். அவர்களின் கைகால்கள் முறிந்தனவோ, என்னவோ ! அவர்கள் குரலிழந்து, அறிவு சோர்ந்து, அயர்ந்து, வீழ்ந்தனர்.

இந்தக் கொடுமையைத் தட்டிக் கேட்க – தடுத்து நிறுத்த யாரும் முன்வரவில்லை. வெளியே துப்பாக்கியும் கையுமாக மரக்கட்டைகளாக நின்று கொண்டிருக்கும் காவற்படையினரே உணர்ச்சியற்ற அலிகளாக தொழிற்பாடற்று இருக்கும்போது தலையிடுவதற்கு யாருக்குத்தான் துணிவு வரும் ?

கணேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. காவற்படையினர் கடமை உணர்ச்சி அற்றவர்களாக – பாரபட்சம் காட்டுபவர்களாக – பாவத்திற்குத் துணை புரிபவர்களாக இருப்பார்கள் எனக் கனவிலும் நினைக்க வில்லை. '' வேலியே பயிரை மேய்ந்தால் ....'' என எண்ணி மனவேதனை அடைந்தார். '' இந்தப் பாவிகள் நாசமாய்ப் போக ! '' என அவரை அறியாமலே அவரின் வாய் முணுமுணுத்தது.

கொடுமை மேலும் சிறிது நேரம் தாண்டவமாடியது. கடைசியில் சீழ்க்கை ஒலி அறிவித்தலைத் தொடர்ந்து தாக்கல் திடீரென நிறுத்தப்பட்டது. காடைகள் புகைவண்டிப் பெட்டிகளிலிருந்து குதித்தோடி ஓரிடத்தில் கூடினர். அவர்கள் மத்தியில் விஷமி பியசேனா காணப்பட்டான். அவன் நடந்து கொண்ட விதத்தில் அவனுக்குக் காடைகள் மத்தியில் செல்வாக்கு இருப்பதாகவும், அவனின் சொற்படி அவர்கள் செயல்படுவதாகவும் தெரிந்தது. பியசேனா காடைகளுக்கு ஏதோ சொல்லிக்கொண்டான். அவர்கள் பொருட்களையும், பொதிகளையும் தூக்கிக்கொண்டு ஓடினர். அவர்களைத் தொடர்ந்து பியசேனாவும் தங்க வளையல்களையும், சங்கிலிகளையும், தாலிக்கொடிகளையும் கைகளில் கொழுவிக் கொண்டு ஓடினான்.

ஈன இரக்கமற்ற இந்த நடத்தைகளைக் கவனித்து கணேசனுக்கு கவலையும், ஆத்திரமும் அதே வேளை பயமும் மனத்தை நிரப்பின. அவர் தாம் பாதுகாப்பெதுவுமற்ற, பரிதாபத்திற்குரிய, ஆளப்படும் ஒரு அடிமை இனத்தில் பிறந்ததை நினைத்து, நினைத்து மனம் நொந்து கொண்டார்.

அந்த நேரம் அந்தக் காடையர் கூட்டம் பக்கத்திலிருந்த வயல் வரப்புகள் வழியாக ஓடிக்கொண்டிருந்தது. வீசிக் கொண்டிருக்கும் காற்றுக்கு வளர்ந்த பயிர்கள், செடி கொடிகள், இலைபுழைகள் தலைசாய்ந்து வீழுகின்றமை, இயற்கை அன்னையே கயமையைக் கண்டு நாணியமைப் போன்றிருந்தது. கன்னித் தரையிருக்க, வளம் கொழிக்கும் வயல் நிலமிருக்க, நீர்வளம் நிறைய இருக்க, கால நிலை சாதகமாய் இருக்க அவற்றை உதாசீனம் செய்து அல்லவை செய்து ஒழுகுவோரை – தட்டிப் பறித்து வயிறு வளர்ப்பவரைக் கண்டு யார்தான் நாணார்கள் ? யார்தான் நகைக்கார்கள் ?

கடந்த முக்கால் மணிநேர காலமளவு நிறுத்தப்பட்டிருந்த புகைவண்டி யாழ்தேவி தொடர்ந்து ஓடுகிறது. அது குருநாகல் வரை ஓடி மேலிடத்துக் கட்டளைக்கிணங்க, திரும்பக் கொழும்புக் கோட்டைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

கொழும்பு கிருலப்பனைப் பகுதியில் ஒரு அழகிய வீடு. அது ஆங்கிலேயர் காலத்துக் கட்டிடம், அழகிய மாது தூய வெந்நிற ஆடையில் அலங்காரமாகக் காட்சியளிப்பதைப் போன்று கட்டிடத்தின் முக்கியப் பகுதிகளுக்கு வெள்ளை நிற தீந்தை பூசப்பட்டுள்ளது. வீட்டின் பின்புறத்தில் ஓங்கி வளர்ந்த பெரிய மரங்கள் முன்புறத்தில் அளவான புற்றரையும், அழகான பூஞ்சோலையும்.

அந்த வீட்டின் உபசரணை மண்டபம் விசாலமானது. நான்கு உட்புறச்சுவர்களிலும் அலுமாரிகள் பதிக்கப்பட்டுப் பலவகையான புத்தகங்கள் இனம் இனமாகப் பிரிக்கப் பட்டு நிரப்பப்பட்டு இருக்கின்றன. முன்வாசலுக்கு நேர் எதிரான நடுச் சுவரில் காந்தி மகாத்மாவின் பெரிய திருவுருவப்படம். அது அலங்கரிக்கப் பட்டுள்ளது. அதுவன்றி அம்மண்டபத்துள் வேறு படங்கள் எதுவும் தொங்க விடப்படவில்லை. நடு மண்டபத்துள் விலை உயர்ந்த ஆசனங்கள் போடப்பட்டுள்ளன. ஆசனங்களின் ஓரங்களிலுள்ள ரீப்போக்களில் அன்றைய தினசரிகள் மாத்திரம் அடுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் தரை செந்நிற பொலிஸ் பூசி மொருகேற்றப்பட்டுள்ளது. ஆசனங்கள் உள்ள இடத்தில் கடும் சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது.

வாயில் தூணொன்றில்' கருணை இல்லம் ' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. மறு தூணில் டாக்டர். எம். கணேசன் M.B.B.S (Cey.,) F.B.C.S., M.D. (Lon.) எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆம் ! அதுவே பிரபல்ய டாக்டர் வாழும் கொழும்பு மனை – ' கருணை இல்லம் '.

அந்த உபசரணை மண்டபத்தில் கணேசன் காணப்பட்டார். அவர் என்றும் அறியாத ஏக்கத்துடன் ஒன்றும் ஓடாத மன நிலையில், ஓரிடத்தில் ஓய்ந்திருக்க முடியாதவராக அங்கும் இங்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார். இதுவரை பல நூறு தடவைகள் மண்டபத்தின் முழு நீளத்தை நடந்திருப்பார். மேலும் நடந்து கொண்டே இருந்தார். கணேசனின் மனத்தில் அமைதி இல்லை. அங்கே கலக்கமும், குழப்பமும் ! அவரின் முகத்தில் ஒளி இல்லை. அங்கே பயமும், துயரமும் ! அம்மனையில் கலை இல்லை. அங்கே மயான அமைதியும் ஆரவாரமின்மையும் !

கணேசன் பலதடவை தொலைபேசி மூலம் தந்தையின் நிலை அறிய முயன்றார். ஒன்றும் இதுவரை பலனளிக்கவில்லை. யாழ்பாணத் தொலைபேசி அலுவலகம் இனக் கலவரம் காரணமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. விமானம் மூலம் ஊருக்குப்போக விமான அலுவலகத்திற்குப் போன் செய்து விசாரித்தார். உடனடியாகப் போக ஆசன வசதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. வழியறியாது தனது நிலைமையை விளக்கி விமானத் தபாலாக மூன்று கடிதங்கள் அனுப்பிவிட்டார். அவை போய்ச் சேர்ந்திருக்குமோ? எப்போதுதான் போய்ச் சேருமோ! அரசு யந்திரம் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை ஸ்தம்பித்துவிட்டதே ?

நாட்டில் நிலைமை மோசமாக விருந்தது. மோச நிலைமை வர வர பயங்கரமாக மாறியது. பன்னிரண்டாம் திகதி வெள்ளி இரவு யாழ்ப்பாணம் சென்றபற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற களியாட்டு விழாவிலே தொடங்கிய பொலிஸ் பொதுமக்கள் கைகலப்பு சில செந்தீப்பொறிகள் நாட்டின் நாலா பக்கங்களிலும் இனக்கலவரப் பெருந்தீயாக மாற வித்திட்டது. கடை உடைப்பு, தீ வைப்பு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு என்ற செந்தீச்சுவாலைகள் தமிழருக்குப் பெரும் சேதத்தை விளைத்தன. மேலும் திட்டமிட்டுத் தலையும், வாலும் வைத்துப் பரப்பப்பட்ட வதந்திகள் எரியும் பெருந்தீக்கு எண்ணெயாகி, தீ பரவ வழி வகுத்தது. தமிழர்கள் ஓடினர். உயிரைப் பாதுகாக்க ஓடினர். உறைவிடங்களையும், உடைமைகளையும் விட்டு ஓடினர். ஆயிரக்கணக்காக ஓடினர். பல்லாயிரக் கணக்காக ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர். புதிய புதிய அகதி முகாம்கள் திறக்கப்பட்டன. தாம் பிறந்த நாட்டிலே தமிழர்கள் தம்மைத்தான்

சிறை கைதிகளாக்கினர். வெம் சிறை வேதனையை அனுபவித்தனர்.

உண்மை நிலைமையை நாடறியச் செய்யும் நல்லெண்ணத்தில் நாட்டு முதல்வர் பதினெட்டாம் திகதி தேசிய அரசுப் பேரவையில் பின்வருமாறு பேசினார்.

" .... மாத்தளையில் தமிழர் ஒருவரின் மதுபானக் கடையொன்றும், தமிழ்க் கடையொன்றும் கொள்ளையடிக்கப் பட்டிருக்கின்றன. தம்புலையில் நிலைமை இன்னும் திருப்திகரமாகவில்லை. அநுராதபுரத்தில் பட்டணப்பகுதியில் ஏறத்தாழ நூறு தமிழ் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. தமிழர் மூவர் கொலை செய்யப்பட்டுள்ளனர் ; கெக்கிராவையில் மூன்று கடைகளும், நொச்சியாகமவில் பத்துக் கடைகளும் எரிக்கப்பட்டிருக்கின்றன. கச்சேரியில் புகலிடம் அளிக்கப்பட்ட ஏறத்தாழ நானூறு தமிழ் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் பன்னிரண்டு பஸ் வண்டிகளின் மூலம் வவுணியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர். குருநாகலில் தமிழ் விடுதியகம் ஒன்று தாக்கப்பட்டது. கல்கமுவவில் ஏறத்தாழ பதினொரு தமிழ்க்கடைகள் தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன. இன்று நான்கு மணி வரை கிடைத்த இறுதியான தகவல்கள் இவை. "

நாட்டு முதல்வரின் இந்த உரையை வானொலி ஒலிபரப்பியது. தேசிய அரசுப் பேரவையில் இனக்கலவரம் சம்பந்தமாக நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களையும், நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன் செயல்களையும் செய்தித்தாள்கள் வெளியிட்டன.

பொலிசாருடன் இராணுவமும், கடற்படையும், விமானப்படையும் தேசப் பாதுகாப்பு வேலைக்கு ஈடுபடுத்தப் பட்டனர். அவர்களுக்கு, சுடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஊரடங்குச் சட்டமும் இடத்திற்கு இடம் வெவ்வேறு நேரங்களில் அமுல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்திலும் பல வன்செயல்கள் நடைபெற்றன. கிருவப்பனைப் பகுதியிலும் அசம்பாவிதங்கள் தலைதூக்கின.

கணேசன் காணக்கூடியதாகவே வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. வெந்தழற் புண்களோடும் வெட்டுக் காயங்களோடும் தமிழர்கள் அள்ளுப் பட்டு ஓடுவதைக் கணேசன் கண்டு அழுதார்.

இன்றைய சூழ்நிலையில் தகப்பனைப் போய்ப் பார்ப்பது முயற் கொம்பென்பது கணேசனுக்குத் தெளிவானது. " தம்பி ! அந்திய காலம் அண்டையில் நின்றால் போதும் அதை மாத்திரம் செய்துபோடு " என்ற தந்தையின் தயவான வேண்டுகோள் கணேசனின் செவிப்பறையில் பலமுறை மோதி ஒலிப்பது போலிருந்தது. தகப்பனின் இந்நேர நிலைபற்றி ஆழ்ந்து சிந்தித்தார். அவரின் மனத்தில் தந்தை குறையுயிரில் அவஸ்தைப்படும் காட்சி தெளிவாகத் தெரிந்தது. தந்தைக்குச் சேடமிழுத்தது. அவர் மகனைக் கண்களாற் தேடுவது போலிருந்தது. இனசன பந்துக்கள் சிலர் தந்தையைச் சூழ்ந்து அழுதனர். வேறு சிலர் வேதனையோடு எதையோ காதோடு காதாகக் கிசுகிசுத்தனர். சிலர் கூடியிருந்து சிவபுராணம் படித்தனர். கணேசனின் மனைவி விமலா அமைதியற்றவளாக அங்கும் இங்கும் ஓடி அலுவல்களைக் கவனிக்கிறாள். கணேசனின் ஒரே பிள்ளை கயல்விழி "அப்பா", "அப்பா" - எனக்கதறி அழுகிறாள்.

கயல்விழி " அப்பா " என அழைப்பது கணேசனையே. கணேசனால் என்ன செய்யமுடியும்? கணேசன் எப்படிப் போவது? எப்படி ஈமக்கடன்களை ஆற்றமுடியும்? கணேசன் தகப்பனுக்கு ஒரே பிள்ளை. இறுதிக் கடன்களை அவரே செய்ய வேண்டும். அது அவரின் தந்தையின் வேண்டுகோளும். என்னைத் தன்னந் தனியாக, தாங்கொணாக் கஷ்டங்களுக்கு மத்தியில் வளர்த்தாரே, டாக்டராக்கப் படாதபாடு பட்டாரே. நான் அவரின் ஒரேயொரு ஆசையையும் நிறைவேற்ற வக்கற்று விட்டேனே என நினைத்து கணேசன் மனம் நொந்து கொண்டார். அவரின் கண்கள் கலங்கி நீர்த்துளிகளை நல்கின.

கண்ணீர்த் துளிகள் கணேசனுக்குச் சாவின் தருவாயில் பருக்கப்படும் தெளிவை நினைவூட்டியது. விமலாவும், கயல்விழியும் இந்நேரம் தந்தையின் வாயுள் பாலை விடுவதாகக் கற்பனை செய்து கொண்டார்.

அடுத்த கணம் கணேசனின் நினைவு வேறு பக்கம் சென்றது. " நான் தந்தையை மட்டுமல்ல. விமலாவையும், கயல்விழியையும் காணும் வாய்ப்பையும் கூட இழந்துவிடுவேனா " என நினைத்துக் கலங்கினார். " கருணை இல்லமும் தாக்கப்படுமோ? ... " என எண்ணிப்பயந்தார். " சில சமயம் நானும் இனக்கலவரத்துக்குப் பலிகடா ஆக்கப்பட்டால்... " என சிந்தனை ஓடியபோது, அறிவு சோர்வதும், அயர்சி ஏற்படுவதும் தவிர்க்கமுடியமால் இருந்தது. இப்படி ஒரு கணம். மறுகணம் மனம் விழித்துக்கொண்டு மேலும் சிந்தனா லோகத்தில் சஞ்சரித்தது.

" நான் யாருக்கும் எதுவிதமான பாவமும் செய்யாதவன். மக்களிடை பாகுபாடு பாராட்டாதவன். இரவுபகல் என்று பாராது - மக்கள் சேவையே மகேசன் சேவை என நினைத்து மக்களின் நலனுக்காக உழைத்தவன். நான் டாக்டராகச் சேவை செய்தவிடங்களில் எல்லாம் எவ்வளவு சேவை செய்துள்ளேன். குருநாகல் மக்களுக்கு எவ்வளவோ செய்தேன். நான் கொழும்பு பெரிய வைத்தியசாலைக்கு மாற்றம் பெற்று வந்தபோது நகரே திரண்டு என் சேவையை மெச்சி விழா எடுத்ததே ! இந்தக் கொழும்புப் பகுதிக்குக் கொஞ்ச நஞ்சமா செய்துள்ளேன்? இக்கிருலப்பனைப் பகுதி என் சேவையை மறந்துவிடுமா ? என்னிடம் உதவி பெற்றோர் நன்றி மறப்பார்களா ? நான் வைத்தியசேவை மாத்திரமா செய்தேன் ? போனவாரமே ஒரு ஏழைக் குடும்பத்திற்கு அள்ளிக் கொடுத்தேனே ! இந்தப் பாடசாலைக்கு நிதியுதவி செய்தேனே ! இந்தப் பாஞ்சாலைக்குப் பணம் கொடுத்தேனே ! மறப்பார்களா ? ... மக்கள் மறப்பார்களா...? மக்கள் மறந்தாலும் மகேசன் மறக்கமாட்டான். ஆண்டவன் அருள்புரிவான் ...... "

" இவன் பியசேனா சிலசமயம் சந்தர்ப்பத்தைப் பாவித்துப் பழி வாங்குவானா? இவன் பொத்துஹேரவில் இழைத்த கொடுமையைப் பொலிஸிற்கு சொன்னேனே! இவனுக்குத் தெரிந்திருக்குமா? ... "

" இவன் பியசேனா என்னுடைய வீட்டிலேயே திருடியதைப் புகார் செய்து, இவனைச் சிறைக்குள் தள்ளினேனே ! இவன் இன்னம் வன்மம் பாராட்டுவானா ? என்னைப் பழிக்குப் பழி வாங்குவதாகக் கொக்கரித்தானே ! இந்தச் சந்தர்ப்பத்தை பாவித்துச் சபதத்தை நிறைவேற்றுவானா ? ... "

" இவனொரு நாகம். பொல்லாத கருநாகம். முழுமதியைக் கருநாகம் விழுங்குகிறதென்பது ஐதீகக் கதை. இக்கதை என்னைப் பொறுத்தவரை நிசமாகிவிடுமோ ! ... என்னை என் தந்தை காணாமற்போனது போல் நானும் எனது



Voice Telecom
international calling cards...
for Asia
<<< and other parts of the world
<<< Europe and U.S.A.
<<< for all parts of Africa
<<< Middle East
<<< Eastern Europe
and for Sri Lanka >>>
SALES ENQUIRY
CANADA
DENMARK
FRANCE
GERMANY
NETHERLANDS
NORWAY
PORTUGAL
SPAIN
SWEDEN
UK
www.voicetelecom.com
NO line rental... NO hidden charges... NO calling cards
VOICE-DIRECT HOME ACCOUNT
to open an account just DIAL....
0800 519 4 519
OR 0207 177 22 00
YOU CAN ALSO OPEN AN ACCOUNT ONLINE BY VISITING OUR WEBSITE!
www.voice-direct.com

ஒரே பிள்ளையைக் காணாமலே சாகடிக்கப்படுவேனா ? ஐயோ விமலா ! ஐயோ கயல்விழி ! நான் ஒரு பாவி ... பாவி '' – கணேசன் அழுதேவிட்டார்.

'' பியசேனாவைத் திருத்தும் நோக்கமாகவே நான் இவனைக் கண்டித்தேன். நல்லவனாக்கும் நோக்கமாகத்தான் கூடாத கூட்டாளிகளுடன் சேரவேண்டாம் என்றேன். புகைக்க வேண்டாம், குடிக்க வேண்டாம் என்றதும் இதனாலேயே. இவன் எதையும் புரிந்து கொள்ள வில்லை. என்னையும் புரிந்துகொள்ள வில்லை. சூதாட்ட வெறி இவனை விட்டு வைக்கவில்லை. என்ன சொல்லியும் ஏது செய்தும் கேட்டானா ? சூதாட்டத்தாலே பள்ளிப் படிப்பையும் நாசமாக்கினானே! பணம் தேவைப்பட்டு, எத்தனை முறை என் வீட்டிலேயே திருடினான். அதனால்தான் கையும், மெய்யுமாகப் பிடித்து, பொலிஸிடம் கொடுத்து அடியுதை வாங்கிக் கொடுத்தேன். திருடிய குற்றத்திற்காகச் சிறை போய் வந்த இவன் திருந்தி விடுவான் என்றல்லவா நினைத்தேன். இவன் என்னையே எதிர்த்து ஏசி, பழிக்குப் பழி வாங்குவேன் என்ற சவாலோடல்லவா வீட்டை விட்டுக் கிளம்பினான் ? ... ''

'' வம்பிலே பிறந்த அநாதையான இவனைத் தேடுவார் யாருமின்றி இருக்க, வாங்கி வளர்த்தேனே. பெற்றார், உற்றார், உறவினர் யாருமற்ற இவனைத் தகப்பனுக்குத் தகப்பனாக, தாய்க்குத் தாயாக வளர்த்தேனே. இவனுக்காக – இவனின் நலனுக்காக செல்வாக்காக இருந்த குருநாகல் வைத்தியசாலையை விட்டு மாற்றம் பெற்று கொழும்புக்கு வந்தேனே. இவை அனைத்தையும் இவன் தெரிந்திருந்தும், என்னைப் பழிக்குப் பழிவாங்கத்தான் போகிறானா ? ''

'' இந்தப் பகுதி எனக்குத் தீங்கு வரவிடமாட்டார்கள். தம்முயிரையும் கொடுத்து என்னைக் காப்பாற்றுவார்கள். பலதடவை நன்றி மறக்கமாட்டோம், நன்றியுணர்வோடு நடப்போம் என உறுதியும் அளித்துள்ளனரே ? ... ''

இந்த நேரம் கணேசனின் கார்ச்சாரதி தருமரட்னா ஓடோடி வந்தான். ''மா ... த்தையா, மா ... த்தையா பியசேனா அப்பே கே கடன்ட கட்டியக்கெக்க எனவா '' என விம்மலோடு வெளி யிட்டான். மாத்தையா, நீங்க அவன் பொத்துஹேரவில் செஞ்சதைப் பொலிசுக்குச் சொன்னது தெரிந்து போச்சு என்றான். உடனடியாக பொலிசுக்கு போன் பண்ணி பாதுகாப்புத் தேடும்படி கணேசனிடம் வேண்டிக் கொண்டான்.

கணேசன் செயலற்று நிற்பதைக் கண்ட தருமரட்னா, '' மாத்தையா, இவன் பியசேனா ஒரு மிருகம். அவனுக்குக் கருணை காட்டவேண்டாம் '' என மீண்டும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

தருமரட்னாவின் இந்த வார்த்தைகளில் நியாயமிருப்பதாகக் கணேசனுக்குத் தோன்றியது. அவர் தொலைபேசியில் பொலிஸ் நிலையத்தோடு தொடர்பு கொண்டார். அவருடன் பேசிய பொலிஸ் அதிகாரி கணேசனுக்குத் தெரிந்தவரே. பலதடவை டாக்டரின் வைத்திய உதவி நாடி கருணை இல்லத்திற்கும் வந்து போனவர். அவர் தாம் உடனே நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்தார்.

சில நிமிட நேரத்திற்குப் பின் காடையர் கூட்டமொன்று தூரத்தில் வருவது தெரிந்தது. அது சந்தர்ப்பத்திற்கேற்ப இனத்துவேஷக் கோஷங்களை எழுப்பியது.

'' தெமுளுவ மறப்பிய .... ''

'' மே சிங்கள அப்பகே ரட்டல் .... ''

'' பறைத் தெமுளு உம்ப மறணவா ... ''

.... இப்போது காடையர் கூட்டம் கருணை இல்லத்தை நெருங்கிவிட்டது. அங்கே ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக அநேகர் காணப்பட்டனர். அவர்கள் பலவிதமான பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தனர். அக்கூட்டத்தின் முன்வரிசையில் பியசேனா காணப்பட்டான்.

இத்தனை காலமாகக் கருணை இல்லத்தில் காட்சிப்பொருளாக இருந்த துப்பாக்கியை ஓடிச்சென்று எடுத்து வந்து '' வெறிநாய்களைச் சுட்டுத் தள்ளுங்க மாத்தையா, '' என தருமரட்னா வேண்டிக் கொண்டான்.

ஆனால் அவன் அடுத்த நிமிடம், '' ஐயோ, மா .. த்..தையா '' என்றவாறு பிணமானான். அவனைப் பியசேனாவின் துப்பாக்கித் தீர்த்துக்கட்டிவிட்டது ! மீண்டும் பியசேனாவின் துப்பாக்கி செந்தீயைக் கக்கியது. அந்த வேட்டுக்குப் பலியானவர் அறக்காவலரே ! அவர் சாந்த சொரூபி காந்தி மகாத்மாவின் திருவுருவப் படத்தின் கீழ் '' அப்பா '' என்றவாறு சுருண்டு வீழ்ந்தார்.

கோட்சேயை விடக்கொடியவனான பியசேனாவின் பித்தலாட்டம் அதனுடன் நின்றதல்ல. மேலும் கோபாவேஷத்துடன் பாய்ந்தோடி அழுக்கேறிய கால்களால் அறங்காவலரை உதைத்தான், மண்டையை ஏறி மிதித்தான். விழி பிதுங்கிய நிலையில் இரத்த வெள்ளத்துள் மிதக்கும் அறங்காவலரை கால்களிற்பிடித்து குறை இழுவையாக இழுத்து வீதியின் மத்திக்குக் கொண்டு வந்து பெட்ரோல் ஊற்றி தீக்கு இரையாக்கினான்.

அவமானமும், அருவருப்புமான இந்தச் செயல் ஒருபுறம் நடைபெற மறுபுறம் வேறோர் வெறியாட்டம் நடைபெற்றது.

காடையர் கூட்டம் கருணை இல்லத்தை சில்ல பொல்லமாக்கியது. கண்ணாடிச் சாமான்களையும், சில தளவாடங்களையும் நொறுக்கியது. விலையுயர்ந்த தளவாடங்களையும், வீட்டுச்சாமான்களையும் சூறையாடியது. துணிமணிகளையும், நகை நட்டுகளையும் கொள்ளையடித்தது. இறுதியில் கருணை இல்லத்தை பெட்ரோல் ஊற்றித் தீயிலிட்டது.

கருணை இல்லம் இன்னம் எரிந்து கொண்டே இருக்கிறது.

## ஒரே நிறம் !

டாக்டர் ராதாகிருஷ்ணன் ஒரு சமயம் லண்டன் சென்றிருந்த பொழுது அவரைப் பார்த்து ஆங்கிலேயர் ஒருவர் "இந்தியர்கள் பல நிறத்தில் இருக்கிறார்கள்" ஆனால் ஆங்கிலேயர்கள் ஒரே நிறத்தில் இருக்கிறார்கள் எனக் கேலியாகப் பேசினார். அதற்கு ராதா கிருஷ்ணன் "கழுதைகள் ஒரே நிறத்தில் இருக்கும். குதிரைகள் பல நிறத்தில் இருக்கும்" எனப் பதிலடி கொடுத்தார்.

## செருப்பு விழுந்தால் ....!

ஒருநாள் பெர்னாட்ஷாவிடம் அவர் நண்பர், நீங்கள் கூட்டத்தில் பேசும்போது உங்கள் மீது ஒரு செருப்பு வந்து விழுந்தால் என்ன செய்வீர்கள் ? என்று கேட்டதற்கு, 'அந்தச் செருப்பின் ஜோடி வந்து விழும்வரை பேசிக் கொண்டிருப்பேன். ஒற்றைச் செருப்பை வைத்துக்கொண்டு என்ன செய்வது' ? என்றார்.



## புறப்படுக போர்வாளே !

*மறக்கப்பட்ட திராவிடத்தில்*
*மனித நேயம் தளிர்க்கிறது !*
*ஒடுக்கப்பட்ட சாமானியர்களின்*
*உரத்த குரல் ஒலிக்கிறது !*
*விடுக்கப்பட்ட சவால்கள் வீழ்த்தி*
*நொறுக்கப்பட்டு விட்டன !*
*ஒழிந்து போனதென்றெண்ணிய*
*'சுய மரியாதை' உருப் பெற்றிருக்கிறது !*
*உன் நடைப் பயணம் வென்று*
*மக்கள் நல்லெண்ணம் பொலிகிறது !*
*போர்வாளே ! புதுப்புனலே !*
*சுவாசத்துள் புதுக் காற்றைப்*
*புகுத்திவிட்டவனே !*
*இன்று*
*தாழ்ந்து கிடக்கும் தமிழகத்தில்*
*வாழ்ந்து காட்டலாம் எனும்*
*எண்ணம் வலுக்கிறது !*
*''வைகோ'' என்ற மாமனிதா !*
*நீ வந்துவிட்டாய் – இனி*
*'வார்த்தை ஜாலங்கள்'*
*மண்மூடிப் போகும்*

*– புனிதன்*


தடைகளைத் தகர்த்துப்
புதிய பொலிவுடன்
மீண்டும் வெளிவந்துவிட்டது

## தென் செய்தி

(மாதம் இருமுறை)

ஆசிரியர் : பழ. நெடுமாறன்
பொறுப்பாசிரியர் : சுப. வீரபாண்டியன்

வெளிநாட்டினருக்கு
ஆண்டுக் கட்டணம் – $ 10
புரவலர் கொடை – $ 100

முகவரி
தென் செய்தி
33, நரசிம்மபுரம், மயிலை
சென்னை – 600 004
தமிழ்நாடு, இந்தியா


## அடுத்த அட்டைப் படம்

எப்படி இருக்க வேண்டும் ?
**வாசகர்களே**
நீங்கள் தீர்மானியுங்கள்
எங்களுக்குத் தெரிவியுங்கள்
தேர்ந்தெடுத்து
வெளியிடப்படும்
அட்டைப்படத்திற்குப்
பரிசு உண்டு

## ஓர் அறிவிப்பு

நம் இதழில் வெளிவந்துக் கொண்டிருக்கும் அந்த மாபெரும் பட்டுச் சேலைப் பரிசுத் திட்டம் போட்டியில் பங்கேற்கும் வாசகர்களில் பலர் எது உண்மையான சேலை, எது அசல் என்பதை எழுதி அனுப்பிவைக்கின்றனர். பலருடைய விடை சரியாகவே இருக்கின்றபோதும், அவற்றினுடைய விலை என்ன என்பதை அவர்கள் குறிக்க தவறிவிடுகின்றனர். விலையும் சரியாக எழுதப்பட்டால்தான் பரிசளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

# இம்மாதம் இப்படித்தான் ஒக்டோபர் 2004

**– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாகரன்**

37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465 செல் : 94441 17 1115

## மேடம் : ( அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ம் பாதம் )



போட்டிகள் அதிகரிக்கும். அலைச்சல், பண விரயம் அதிகமாகும். மனத்தில் தைரியம் ஒரு பக்கம் கை கொடுக்கும். கணவன், மனைவி உறவு சுமாராக இருக்கும். சின்னச் சின்ன வாக்கு வாதங்கள் வந்து போகும். யாருக்கும் பண விஷயத்தில் உறுதிமொழி தர வேண்டாம். லாட்டரி, ஷேர் பணம் தரும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பர். உறவினர்கள் நண்பர்களால் மனத்தாங்கல் வந்து போகும். அரசால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். திடீர்ச் செல்வாக்கு கூடும். அரசியல், இயக்கங்களில் பதவிகள் கிடைக்கும். அடிவயிற்றில், தொண்டையில், காதில் வலி வந்துபோகும். வியாபாரம் செழிக்கும். ஆனால் புது முதலீடுகளில் கவனம் தேவை. உத்யோகத்தில் மூத்த அதிகாரிகள் சொல்வதை அப்படியே ஏற்பது நல்லது. வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் கூடா நட்பை தவிர்ப்பது நல்லது. கலைஞர்கள் கிசுகிசுக்களில் சிக்குவர். சுமாரான மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 16ஆம்தேதிமாலை முதல் 17, 18ஆம்தேதி மாலை வரை |
| இராசியான எண்கள் | : | 1, 3 |
| இராசியான நிறங்கள் | : | மெரூன், ஊதா |

## இடபம் : ( கிருத்திகை 2, 3, 4ம் பாதம்,ரோகினி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள் )



புதிய சிந்தனைகள் மனத்தில் பிறக்கும். குடும்பத்தில் சலசலப்புகள் குறையும். உறவினர் விருந்தினர் வருகை அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும். பணவரவு அதிகரிக்கும். குழந்தை பாக்கியம் உண்டாகும். பழைய கடன் தீரும். சொத்துப்பிரச்சனை வந்துபோகும். பூர்வாங்கச் சொத்திற்காக அதிகம் செலவு செய்ய வேண்டாம். திருமணம் நடக்கும். வேலை கிடைக்கும். பிள்ளைகளுக்கு மருத்துவச் செலவுகள் வந்துபோகும். ஆடை, ஆபரணங்கள் சேரும். உடன் பிறந்தவர்களால் செலவுகள் அதிகரிக்கும். வெளிவட்டாரம் சிறக்கும்.உத்யோகத்தில் நிம்மதி பிறக்கும். புது வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். மாணவர்களின் மதிப்பெண்கள் கூடும். மகிழ்ச்சி பெருகும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 18ஆம்தேதி மாலை முதல் 19, 20ஆம்தேதி நண்பகல் வரை |
| இராசியான எண்கள் | : | 5, 6 |
| இராசியான நிறங்கள் | : | பச்சை, வெள்ளை |

## மிதுனம் : ( மிருகசீரிடம் 3, 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ம் பாதங்கள்)



உற்சாகம் பிறக்கும். வி.ஐ.பிக்கள் உதவுவார்கள். முடியாது என நினைத்திருந்த காரியத்தை முடிப்பீர்கள். தம்பதிகளுக்குள் மகிழ்ச்சி கூடும். தாயின் உடல்நிலை சீராகும். விலை உயர்ந்தப் பொருட்கள் வீடு வந்து சேரும். பழைய கடன் பிரச்சனை ஒன்று தலை தூக்கும். சகோதரி உதவுவாள். சொத்துப் பிரச்சனை தீரும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். புதிதாக முதலீடு செய்வீர்கள் . பங்குதாரர்களிடையே ஒற்றுமை உருவாகும். உத்யோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். கூடுதல் சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் பரிசுப் பாராட்டு பெறுவார்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்திகள் தேடிவரும். ஒருபடி உயரும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 20ஆம்தேதி நண்பகல் முதல் 22ஆம்தேதி வரை |
| இராசியான எண்கள் | : | 6, 9 |
| இராசியான நிறங்கள் | : | ரோஸ், ஆரஞ்சு |

## கடகம் : ( புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயிலியம் )



பேச்சில் இனிமை கூடும். பெரிய காரியங்களையெல்லாம் சாதித்துக் காட்டுவீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். சொத்துச் சேரும். பழைய வீட்டை விற்று விட்டுப் புது வீடு வாங்குவீர்கள். தாம்பத்யம் இனிக்கும். பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். லாட்டரி, ஷேர் பணம் தரும். வழக்குகள் சாதகமாகும். நெருங்கிய உறவினருடன் இருந்த மோதல் போக்கு விலகும். வியாபாரத்தில் போட்டிகளை எளிதாகச் சமாளிப்பீர்கள். புதிய பங்குதாரர்களைச் சேர்ப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் நிர்வாகத்திறன் அதிகரிக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும். வாகன வசதி பெருகும். கன்னிப் பெண்களின் காதல் இனிக்கும். சாதிக்கும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 23, 24 தேதிகளில் நிதானம் தேவை |
| இராசியான எண்கள் | : | 6, 9 |
| இராசியான நிறங்கள் | : | இளஞ்சிவப்பு, ப்ரௌன் |

## சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



வாக்கு சாதுர்யம் கூடும். அழகும், இளமையும் அதிகரிக்கும். உறவினர்கள் கண்டு வியக்கும்படி உற்சாகமாகச் செயல்படுவீர்கள். சொத்துக்களை நெறிப்படுத்துவீர்கள். அரசால் இருந்த அச்சுறுத்தல்கள் விலகும். நாடாளுபவர்களின் நட்புக் கிடைக்கும். புதுமொழி கற்பீர்கள். பங்காளிப் பிரச்சனை சுமுகமாகும். கனவுத் தொல்லை விலகும். வாகனம் வாங்குவீர்கள். எலக்ட்ரானிக் கருவிகளும் புதிதாக வாங்குவீர்கள். மகான்களின் ஆசி கிட்டும். நீண்ட நாளாக எதிர்பார்த்து

வந்த ஒரு வியாபாரம் இப்போது முடியும். புது ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். உத்யோகத்தில் உங்களுக்கு எதிரானவர்கள் தண்டிக்கப்படுவார்கள். கன்னிப் பெண்களின் காதல் இனிக்கும். மாணவர்கள் மதிக்கப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 25, 26, 27ஆம் தேதி 9.00 மணி வரை |
| இராசியான எண்கள் | : | 1, 3 |
| இராசியான நிறங்கள் | : | மஞ்சள், நீலம் |

**கன்னி** : ( உத்திரம் 2, 3, 4ம் பாதம், அஸ்தம், சித்திரை 1, 2ம் பாதங்கள் )



ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளில் ஈடுபட்டு எதையும் முடிக்க முடியாமல் திணறாதீர்கள். பேச்சில் நிதானம் தேவை. முன்கோபம் அதிகரிக்கும். உல்லாசப் பயணங்கள் உண்டு. வழக்கில் நிதானம் தேவை. புதியவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். கணவன் – மனைவிக்குள் சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்துபோகும். சகோதர சகோதரிகளிடம் நிதானம் தேவை. பிள்ளைகள் உதவுவார்கள். வெளி வட்டாரம் சுமாராக இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளைத் தவிர்க்கவும். கூட்டுத் தொழிலில் குழப்பம் நீடிக்கும். உத்யோகத்தில் கடினமாக உழைத்து நல்ல பெயரெடுப்பீர்கள். கன்னிப் பெண்களின் கனவுகள் நனவாகும்.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 27ஆம்தேதி காலை 9 மணி முதல் 28, 29 தேதி மாலை 5 மணி வரை |
| இராசியான எண்கள் | : | 6, 8 |
| இராசியான நிறங்கள் | : | வெளிர்நீலம், பச்சை |

**துலாம்** : ( சித்திரை 3, 4ம் பாதம், ஸ்வாதி, விசாகம் 1, 2, 3ம் பாதங்கள் )



சமயோசித புத்தியால் சாதிப்பீர்கள். பிறருக்கு நல்லது செய்யப்போய் உங்களுக்குக் கெடுதல் வந்து சேரும். குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம். மனைவிக்கு மருத்துவச் செலவுகள் உண்டு. உங்களைப் பற்றிச் சிலர் பலவாறு கிசுகிசுப்பார்கள். புதிய நண்பர்களிடம் கவனம் தேவை. கோபம் தவிர்க்கவும். விலையுயர்ந்தப் பொருட்களைக் கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் புரோக்கரேஜ் இலாபம் தரும். புது முதலீடுகள் இப்பொழுது வேண்டாம். தந்தையின் உடல்நிலை பாதிக்கும். உடன் பிறந்தவர்களால் உபத்திரவம் உண்டு. உத்யோகத்தில் நீங்கள் கடினமாக உழைத்தாலும் மற்றவர்களுக்கு நல்ல பெயர் செல்லும். கன்னிப் பெண்களும், மாணவர்களும் பெற்றோர்களைக் கலந்தாலோசிப்பது நல்லது. சுமாரான மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 2, 3, 4ஆம்தேதி மாலை 6 மணி வரை மற்றும் 29ஆம்தேதி மாலை முதல் 30, 31 வரை |
| இராசியான எண்கள் | : | 3, 8 |
| இராசியான நிறங்கள் | : | அடர்நீலம், கிரே |

**விருச்சிகம்** : ( விருச்சிகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை )



எத்தனை முறை தோற்றாலும் தைரியத்தை இழக்க மாட்டீர்கள். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்தினாலும் கவலைப்பட மாட்டீர்கள். பெரிய காரியமெல்லாம் எளிதாக முடியும். சின்ன விஷயமெல்லாம் கடினமாக முடியும். கணவன்–மனைவி உறவு சுமார்தான். காசு விஷயத்தில் கறாராக நடந்து கொள்ளுங்கள். உங்களை ஏமாற்றச் சிலர் முயல்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரம் செழிக்கும். புது யுக்திகளைக் கையாண்டு இலாபம் அடைவீர்கள். உத்யோகத்தில் முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்போது கவனம் தேவை. மாணவர்கள் வெற்றி பெறுவார்கள். போராடி வெல்லும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 4ஆம்தேதி மாலை 6 மணி முதல் 5, 6 தேதி வரை |
| இராசியான எண்கள் | : | 3, 9 |
| இராசியான நிறங்கள் | : | ப்ரௌன், ஊதா |

**தனுசு** : ( மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



உங்கள் ராசிநாதன் குரு அங்காரகனுடன் நிற்பதால் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். பலரின் உண்மை மனத்தை இப்பொழுதுதான் புரிந்து கொள்வீர்கள். மனைவியால் செல்வாக்கு கூடும். சகோதரர் தன் தவறை உணர்வார். பெற்றோரின் உடல்நலம் பாதிக்கும். பிள்ளைகளால் அலைச்சல் வந்து போகும். கனவுத் தொல்லைகள் அதிகரிக்கும். உணவில் காரம் தவிர்க்கவும். ஆபரணங்கள் சேரும். மின் சாதனங்கள் வாங்குவீர்கள். இழந்தப் பதவியை பெறுவீர்கள். வியாபாரத்தில் அந்நிய நபர்கள் உதவுவார்கள். உத்யோகத்தில் நெருக்கடிகளை எளிதாகச் சமாளிப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டில் பதக்கம் பெறுவார்கள். தடைகளை உடைத்தெறியும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 7, 8, 9ஆம் தேதி இரவு 8 மணி வரை |
| இராசியான எண்கள் | : | 1, 7 |
| இராசியான நிறங்கள் | : | ஆரஞ்சு, வெள்ளை |

**மகரம்** : ( உத்திராடம் 2, 3, 4ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள் )



மனசாட்சிப்படி பல காரியங்களை முடிப்பீர்கள். கணவன்– மனைவி உறவு இனிக்கும். எதிரிகளை வெல்வீர்கள். செல்லுமிடமெல்லாம் சிறப்புக் கூடும். மாதத்தின் மத்தியிலிருந்து வருமானம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். வழக்குகள் சாதகமாகும். சேமிப்பீர்கள். உடன் பிறந்தவர்களுக்குச் சுபச் செலவுகள் செய்வீர்கள். உல்லாசப் பயணங்கள் உண்டு. அரசினால் ஆதாயம் அடைவீர்கள். நண்பர்களுக்குள் பிணக்குகள் தீரும். வெளி வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் பற்று வரவில் தேக்கம் விலகும். பழைய சரக்குகள் விற்கும். புதுப் பங்குதாரர்களைச் சேர்ப்பீர்கள். புது வேலை கிடைக்கும். கல்யாணம் நடக்கும். மாணவர்களின்

மதிப்பெண்கள் கூடும். கன்னிப் பெண்களுக்கு உயர் கல்வித் தடை நீங்கும். கலைஞர்கள் சாதிப்பார்கள். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 9ஆம்தேதி இரவு 8 மணி முதல் 10, 11 வரை |
| இராசியான எண்கள் | : | 5, 6 |
| இராசியான நிறங்கள் | : | சில்வர்கிரே, கிளிப்பச்சை |

கும்பம் : (அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள்)



புதிய சிந்தனை பிறக்கும். பொருட் செலவுகள் அதிகரித்தாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். உறவினர்களிடம், நண்பர்களிடம் கவனமாகப் பழகுங்கள். விலையுயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாளுங்கள். ஆடை, ஆரபணம் சேரும். திடீர் பணவரவு லாட்டரி, ஷேரால் உண்டு. சகோதரரால் அலைச்சல் அதிகமாகும். மனைவியின் உடல்நலம் பாதிக்கும். வி.ஐ.பிக்களிடம் கவனமாகப் பழகுங்கள். பேச்சில் நிதானம் தேவை. வியாபாரத்தில் யாரையும் நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டாம். வேலையாட்களால் பிரச்சனை தலை தூக்கும். உத்யோகத்தில் சல சலப்புகள் ஏற்படும். கன்னிப் பெண்களுக்கு கல்வியில்முன்னேற்றம் உண்டு. மாணவர்களின் நினைவாற்றலைப் பெருக்க அதிகாலையில் கற்பது நல்லது. நிதானம் தேவைப்படும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம தினங்கள் | : | 12, 13, 14ஆம் தேதி காலை 10 மணி வரை |
| இராசியான எண்கள் | : | 4, 1 |
| இராசியான நிறங்கள் | : | கிரே, பிங்க் |

மீனம் : ( பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி )



ஒரு பக்கம் ஆதரவும், செல்வாக்கும் கூடும். மறறொரு பக்கம் சின்னச் சின்னப் பிரச்சனைகள் தலைதூக்கும். மனைவிக்கு மருத்துவச்செலவுகள் வந்து போகும். கணவன் – மனைவிக்குள் கடுமையான வாக்குவாதம் வரும். கவனம் தேவை. நாடாளுபவர்கள் உதவுவார்கள். ஆடை, ஆபரணம் சேரும். பழைய கடன் பிரச்சனையால் மன உளைச்சல் வந்து போகும். வெளிவட்டாரம் சுமாராக இருக்கும். சகோதர சகோதரிகளால் அலைச்சல் ஏற்படும். லாட்டரி, ஷேர் ஆதாயம் தரும். வாகன விபத்து, வாகனச் செலவு அதிகரிக்கும். வியாபாரம் களைகட்டும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதுச் சரக்குகளைக் கொள்முதல் செய்வீர்கள். கன்னிப்பெண்கள் எச்சரிக்கையாகச் செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் செல்வாக்கை அடைவீர்கள். ஓரளவு மகிழும் மாதமிது.

| | | |
|---|---|---|
| சந்திராட்டம1 தினங்கள் | : | 14ஆம்தேதி காலை 10 மணி முதல் 15, 16 வரை |
| இராசியான எண்கள் | : | 2, 3 |
| இராசியான நிறங்கள் | : | வெள்ளை, ரோஸ் |

# நிறங்கள்

நிறங்கள் வெளிர் நிறங்கள்(light colours) டல் (dull-கவர்ச்சியற்ற)லாக இருப்பதாகச் சிலர் நினைப்பர். ஆனால் அவைதான் ஆய்வாளர்களின் கணிப்புப்படி கவனத்தை ஈர்க்கும். ஊதா உடுத்தினால் நீங்கள் இளமையாக உணர்வீர்கள். அடர்நீலம் (dark blue)முதிர்ச்சி, நிலைத்தன்மை, நம்பிக்கையைக் கொடுக்கக்கூடிய நிறம். பொறுப்பு, நம்பகத்தன்மை, நேயம் போன்றவை கொண்ட நீலம். அதுவும் அடர்நீலம்(navy blue)தான் போலீஸ் வேலைக்கு உகந்ததாம். இது, புதியவர்களைச் சந்திக்கும்போது உடுத்த ஏற்ற நிறம். வெளிர் நீலம் அணிந்தால் இளமை, ஆண்மை போன்றவற்றைப் பிரதிபலிக்கும்.

சிவப்பு, அபாயத்தைக் குறிக்கும் என்றாலும் உடுத்தினால் அது குதூகலத்தையும் உற்சாகத்தையும் உங்களிடம் பார்ப்பவரை உணரச் செய்யும். ஆண்களை ஈர்க்க நினைக்கும் பெண்களுக்குச் சிவப்பே சிறந்தது. சிவப்பு, அதிலும் ஆரஞ்சும் சிவப்பும் கலந்த நிறத்தில் உடையுடுத்தும் பெண்ணைப் பார்க்கும் ஆணுக்குள் , அந்நிறம் ஒரு வேதியியல் மாற்றத்தைக் கொணர்கிறது. மூளை உடலுக்கு அனுப்பும் சிக்னல், அதிக இபைனெஃப்ரின்((epinephrine) என்னும் ஹார்மோன் சுரக்கக் கட்டளையிடுகிறது. இது இதயத்துடிப்பை அதிகரிக்கச் செய்து உடல் சூட்டையும் கூட்டும்.

பச்சை உடையில் நேர்ச் சிந்தனை மற்றும் சுகமான இயற்கையுணர்வைக் கொண்டவராகத் தெரிவீர்கள். இஸ்லாமியர்களுக்குப் புனிதமான பச்சை, மன உளைச்சலைப் போக்க வல்லது. உபயோகிக்க இதுவே காரணம். பச்சை உடுத்தியவருடன் இருப்பவர், இயல்பாக இருப்பர். அணியும் டையில் கொஞ்சம் பச்சை டிசைன் இருந்தாலே கூடப்போதும்.

வெள்ளை, தூய்மையையும், நேர்மையையும் உடையவர் என்று உணரச்செய்யும். கருப்பு இவர் மிகவும் சீரியஸ் / அழுத்தமான ஆசாமி என்று நினைக்க வைக்கும். சாம்பல் நிறம் உங்களை முதிர்ச்சியுடையவராயும், நேர்மையானவராயும் காட்டும்.

பிரௌன் நிறம் உங்களை முழுமையாகப் பிரதிபலிக்கும். பழுப்பு நிறம் பாதுகாப்புணர்வைக் கொடுக்கவல்லது. இது விவசாயத் தொடர்புடைய நிறம். இந்த நிறத்தை உடுத்தியவர்களுடன் பேசுபவர்கள் இதயபூர்வமாக ஒளிவுமறைவின்றிப் பேசுவார்கள். ஆனால், வர்த்தகத்துறைக்கு இது ஏற்ற நிறமல்ல. கருநீலம்தான் சிறந்தது.

மஞ்சள் மிகவும் ரிஸ்கியான (risky-நிச்சயமில்லாத) நிறம். மஞ்சள் உடுத்துவீர்களேயானால் முன்கோபிகள் உங்கள் மீது சீக்கிரமே கோபப்பட வாய்ப்புண்டு. கோபமும் மறையாமல் அதிக நேரம் நிலைத்திருக்கும். குழந்தைகள் கூட அறைச்சுவரின் நிறம் மஞ்சளாய் இருந்தால் அதிக நேரம் அழும். நேர்சிந்தனை யுடையவராகவும் இமோஷனலாகவும் மஞ்சள் உங்களைக் காட்டும். இதமும், இளமையுடனான பெண்மையும் கொண்டவராக அறியப்பட எந்தப் பெண்ணுக்குத்தான் பிடிக்காது. உங்களுக்கு ஏற்ற நிறம் பிங்க் (Pink). இந்நிறம் உடுத்துபவருக்கும், சுற்றுப்புறத்துக்கும் அமைதியைக் கொடுக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆய்வாளர்கள் சிறைகளில் சில ஆய்வுகள் மேற்கொண்டார்கள். சிறைச் சுவர்களுக்கு பிங்க் (Baker Miller / Pepto - Bismol pink) நிறச்சாயம் பூசப்பட்டது. சிறைக்கைதிகள் ஆக்ரோஷத்தைத் துறந்து அமைதியடைந்தனர். சிறையினுள்ளிருந்து வெளியேற்றப்பட்டு 30 நிமிடங்களுக்குள் அவர்களுள் அமைதி நிலவியது. யாருடனாவது கடும் சண்டை போடக்கூடிய சாத்தியமிருந்தால், பிங்க் நிற உடையுடுத்துங்கள். சண்டை சமாதானமாகலாம்.

# தவம் !

## வள்ளலார் பெருமானும் மரணமிலாப் பெருவாழ்வும் !

இம்மாதம் – அக்டோபர் ஐந்தாம் நாள் ஒரு உன்னதமான ஒருவரைத் தமிழகம் பெற்ற தினம். பிறர்க்கென வாழ்ந்த அப்பெருந்தகை, ' வள்ளலார் ' என்னும் ' வடலூர் இராமலிங்க சுவாமிகள் ' என்றும் அழைக்கப்பட்டவர். தனது ஜீவனை ஈடேற்றுமாறு தனிவாழ்க்கை வாழந்த தமிழகத்து துறவிகள் வரலாற்றிலே பிறர் உய்வுற வாழப் பிரார்த்தனை மேற்கொண்ட பெருமை கொண்டவர். அவரது வாழ்வும் வழிகாட்டலும் புதியதொரு புரட்சிப்பாதை என்பதால்தான் அவரைப் பலர் புரிந்து கொள்ள மறுத்தார்கள். " கடைவிரித்தேன் கொள்வாரில்லை " என அவர் மனம் வெதும்பிச் சென்றார்கள். இது யேசுநாதர் " தாகமாயிருக்கிறது " என்ற வார்த்தைக்கு ஒப்பானதுதான் என்பதை உணர நமக்கு நீண்ட நாளாயிற்று. மதத்தை வெறும் சடங்குகளுக்குள் சங்கமமாக்கிப் பிழைப்பு நடத்திய பெருங்குடியினர்களுக்கு இவரது சமயங்கடந்த சமரச வாழ்வு கசந்து போனதுடன் கருத்திலும் மாறுபட்டு நின்றது. மாக்ஸின் தத்துவப்படி " மாறும் என்பது மாறாது. மாறாது என்பது மாறும் " என்றுள்ளது. அதற்கு முன்பே வள்ளலார் " உலகில் உள்ள மனிதர் முதல், நடக்கும், நகரும், அசையும், அசையா எல்லாமே அழிவதில்லை. அவை மாற்றுப் பொருளாகின்றன " என்ற கருத்தைச் சொன்னவர். அப்போது வர்ணாசிரம தத்துவத்துள் மூழ்கி இருந்த மதப் பித்தர்களுக்கு இது புரியவில்லை.

சாகாத வரத்தைப் பெற மூன்று மகா மந்திரங்களைத் தந்தார் வள்ளலார். பசித்திரு! தனித்திரு ! விழித்திரு என்பவைதான் அவை. பசித்திரு என்றால் சுகித்திருக்க உண்ணாமல் உயிர்த்திருக்க ஓரளவு உண் என்பது. தனித்திரு என்றால் சிவ சிந்தனையுடன் ஒரே நிலையில் இரு என்பது. விழித்திரு எனில் எதற்கும் அறிவுக் கண்ணைக் கொண்டு ஆழமாக நோக்கு என்பது. இந்த மூன்றுக்கும் மூலவராக அடிகள் வாழ்ந்து காட்டியிருக்கிறார். பசித்திருக்கும் ஒருவனுக்கு உபதேசங்கள் உணரப்படுதலின் ஏழ்மையைப் புரிந்து கொண்டதனாலேயே, அவர் சத்திய ஞான சபையுடன் தரும சாலையையும் இணைத்தார்.

இது சமயத்தை அல்லது பக்தியை சாதாரண மனிதனின் நடைமுறைச் சாத்தியமாக்கியது. அதனால்தான் துறவு நிலையிலும் வெள்ளை உடையை அவர் விரும்பி ஏற்றார்.

" காற்றாலே புவியாலே ககணமதனாலே
கனலாலே புனலாலே கதிராதியாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்
கருவியாலே
கோளாலே பிற இயற்றும்
கொடுஞ்செயலாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே
விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன்
விரைந்தளித்தான் எனக்கே "

மேலே உள்ள பாடலின் மூலம் தனது மரணம் இல்லாப் பெருவாழ்வை வள்ளலார் உணர்த்தி இருக்கிறார். இது ஒரு வித்தியாசமான வாய்மொழி. " ஒருவன் பிரார்த்தனை செய்வது அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல.இந்த உலகமெல்லாம் வாழும்படி பிரார்த்தனை செய்ய வேண்டும். " அப்படிச் செய்வதால் அதில் அவனுக்கு வேண்டிய எல்லாம் அடங்கிவிடுகின்றன என்றார். சமூகக் கருத்துக்களை யேசுநாதர் சொன்னபோது எழுந்த கருத்து மோதல்கள் போன்றே இவர் காலத்திலும் ஏற்பட்டன. தாழ்ந்து கிடந்த தமிழகம் இதன் தாத்பர்யத்தை உணர மறுத்துவிட்டது. எனினும் வள்ளலார் தனி மனிதனாக இப்போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறார்.

வள்ளல் சுவாமிகள் ஒரு சமயவாதியாக இருந்ததில்லை. அவர் எந்த சமயத்தையும் இழிவுபடுத்தியதும் இல்லை. மக்களைத் தூய்மைப்படுத்துவதே சன்மார்க்கம் என அவர் எண்ணினார். அந்த வழியில் அவர் ஆற்றிய தொண்டின் தூய்மைதான் அவரது எதிரிகளைக்கூட – ஏன் நாவலர் பெருமானைக் கூட எழுந்து நின்று வணங்க வைத்தது. இதுவரை எந்த ஒரு இறைத் தொண்டனுமே தராத அளவுக்கு அவரது அருட்பாக்கள் பதினைந்தாயிரத்துக்கு மேல் நமக்கு அளிக்கப்பட்டிருகின்றன. உலகில் எந்த ஞானியுமே இத்தனை ஆயிரம் வரிகள் இறைவனைப்பற்றிப் புகழ்ந்ததில்லை – விளக்கியதுமில்லை. எல்லையற்ற பரம்பொருளின் பெரு வெளிச்சமாக அவரது வாழ்வு அமைந்திருந்தது. அருவம் – உருவம், அருவுருவம் என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்குச் சரியான வழிகாட்டியாக அவர் அமைந்திருந்தார். இது திருமூலரின் பின் தோற்றமெடுத்த மறு உருவமாகும். அவர் மறையுமுன் தந்த உண்மை மொழிகள் இவை.

1. நான் கொடுத்த போதனைகளை இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும் வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப் படுத்துவார்கள். அந்நிய நாட்டார் அவர்களைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வார்கள்.
2. மாமிசம் உண்ணும் பழக்கம் உலகில் நாளாவட்டத்தில் விட்டுப்போகும்.
3. சாதி சமய வேற்றுமைகளால் ஏற்படும் வேற்றுமையானது நீங்கி இந்தியாவில் சகோதர அறம் நிலை நாட்டப்படும்.
4. உண்மையில் கடவுள் என்பது 'அகிலமாம் – அன்பாம்' என்பதே எனப் பரிபூரணம் பெறும்.
5. ஒவ்வொருவருக்கிடையும் அடங்கி யிருக்கும் தெய்வீகச் சக்தியைத் தெரிந்து கொண்டால் இயற்கைச் சக்திகளை மாற்றக்கூடிய வல்லமை ஏற்படும்.

இப்படிச் சொன்ன வள்ளலாரே ஒரு அன்பு சக்தியுமாவார். நடந்தபோது அவர் பாதங்கள் தரையில் பதியவில்லை. அவரது உடலின் நிழல் பூமியில் படவில்லை. அவரது உடம்பு மழையில் நனைந்ததும் வெயிலில் வாடியதுமில்லை. அவரைப் புகைப்படம் பிடிக்கமுடியவில்லை. ஒரு முறை அன்பர்கள் பலர் சேர்ந்து அவர் அறியாமல் அவரைப் புகைப்படம் பிடிக்க – அன்று புகழ் பெற்றிருந்த புகைப்பட நிபுணர் ஒருவரை ஏற்பாடு செய்தார்கள். வடலூரில் வைத்து அவரைப் படம் பிடித்தனர். அந்தப் புகைப்படம் அனைத்திலும் ஆடைகள் மாத்திரம்தான் மங்கலாகத் தெரிந்தன. உருவமும் கால்களும் காணப்படவில்லை. ஒளிபெற்ற உடலுக்கு நிழல் ஏது ? என்ற உண்மையை அதன்பின்தான் அவர்களால் உணர முடிந்தது. கல்ப சித்தி, யோக சித்தி, ஞான சித்தி என்ற மூன்று சித்திகளையும் பெற்ற அவரது தேகம் சுத்த தேகமாக, பிறகு பிரணவ தேகமாக மாறி இறுதியில் ஞான தேகமாகியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப அற்புதமிது. 1874 ஜனவரி 30 வெள்ளிக்கிழமை தைப்பூசத்தன்று உள்ளே போகிறேன் – என்னைத் தேடாதீர்கள் தேடினாலும் வெற்றிடமாகத்தான் இருக்கும் என்று விடை பெற்றார் வள்ளலார். இது பற்றி விளக்க இப்பக்கம் போதாது. வள்ளலாரை வள்ளுவர் இப்படி உள் வாங்கியிருக்கிறார்.

" தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும் " – (குறள் 268)

**– கோத்திரன்**



THARANI JEWELLERY
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 020 8902 6777
நவநாகரீக தங்க நகைகளுக்கு
தாரணி ஜுவல்லரி




Vahizan Disc World
Get up to 10% off !!!
From our online shopping!!!
வாகீசன் டிஸ்க் வேள்ட்
எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக் குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.
இவற்றைவிட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப் பாடல்கள், கர்னாடகவார்த்திய இசைகள் யாவும் MP3, AUDIO CD, CASSETTE ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.
WE SELL TITLES FROM INRECO, GEETHANJALI, VEDU RPG, AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES !
Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com
Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com

இந்தப் பக்கத்துக்கு ஆதரவு நல்கியவர்



MITHUS JEWELLERY
322-324 London Road Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792

DIAMONDS PALACE
76 Tooting High Street London SW17 ORN
Tel : 020 8767 5333 Fax : 020 8767 5814

லண்டன் ரூட்டிங் முத்துமாரியம்மன் கோவிலில் 30.08.2004 அன்று நடைபெற்ற தேர்த் திருவிழா

